விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 304 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 02 ஞாயிற்றுக்கிழமை (19.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உலகம் முழுவதும்
மிகக் குறைந்த விலையில்
மற்றும் பாதுகாப்பாக
பார்சல்களை அனுப்புங்கள்
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
பிரான்ஸ் Rs.2150/= இங்கிலாந்து Rs.1400/= ஜெர்மனி Rs.2000/=
(5481)
இல. 81A, பருத்தித்துறை வீதி, நெல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
GTV Express 011 4 654 444

## பொருளாதார அடைவை தக்கவைக்க மறுசீரமைப்புக்களைத் தொடருங்கள்

### சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை தற்போது அடைந்துள்ள பொருளாதார அடைவுகளைத் தக்க வைக்க மறுசீரமைப்பு நடவடிக்கை களைத் தொடர வேண்டும் என்று சர்வதேச நாணய நிதி யத்தின் ஆசிய மற்றும் பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் மற்றும் பிரதிப் பணிப்பாளர் தோமஸ் ஹெல் பிளிங் ஆகியோர் தெரிவித் துள்ளனர்.

பிராந்திய பொருளாதார நிலைவரம் குறித்து விளக்க மளிக்கும் வகையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கையின் முன்னேற்றம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கை யிலேயே அவர்கள் மேற்

04ஆம் பக்கம் பார்க்க

புத்தசாசன அமைச்சர் யாழ்.விஜயம்

## தொல்பொருள் இடங்களை பார்வையிட்டு ஆராய்வு



23ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சியில் வாளுடன் நடமாடும் இளைஞன்

### 6 குடும்பங்கள் அச்சத்தில் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கில் வாளு டன் நடமாடும் இளைஞன் ஒருவர் வீதியில் செல்வோர் மீது தாக்குதல்

24ஆம் பக்கம் பார்க்க

# போதை வர்த்தகத்துக்கு விரைவில் சமாதி கட்டப்படும்

### ஜனாதிபதி அநுர மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைப் பேரழிவுக்கு இட்டுச் செல்லும் போதைப்பொருள் வர்த்தகத்தை முழுமையாக ஒழித்துக் கட்டுவது உறுதி என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித் துள்ளார். *(23ஆம் பக்கம் பார்க்க)*



## யாழ்.போதனாவின் 175 வருட நிறைவு

### விசேட தபால் தலை வெளியீடு



(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத் தியசாலையின் 175 வரு டச் சேவை நிறைவை

04ஆம் பக்கம் பார்க்க

## போதை மாபியாக்களை முழிவுகட்ட கடற்றொழிலாளர்கள் ஒத்துழைக்க வேண்டும்

### அமைச்சர் சந்திரசேகர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருள் மாபியாக்களுக்கு முடிவுகட்ட கடற்றொழி லாளர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரியுள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதி கள் மற்றும் கடலட்டைச் சங்கப்

04ஆம் பக்கம் பார்க்க



இஷாரா செவ்வந்தியை

## 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

நேபாளத்தில் இருந்து அண்மையில் கைது செய்யப் பட்டு நாட்டிற்கு அழைத்து வரப்பட்ட கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கின் முக்கிய குற்றவாளியான இஷாரா செவ் வந்தியை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணைக்கு உட் படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க

## சண்டிலிப்பாயில் வன்முறை கேகாலை இளைஞன் கைது

### கைக்குண்டு, வாள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்டிலிப் பாய்ப் பகுதியில் வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றச் சாட்டில்கேகாலையைச்சேர்ந்த இளைஞன் ஒருவர் கைக் குண்டு மற்றும் வாளுடன் நேற்றுக் கைது செய்யப்பட் டுள்ளார்.

யட்டியாந்தோட்டை, அல கொலவத்தைப் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளை ஞனே இவ்வாறு கைது செய்

23ஆம் பக்கம் பார்க்க

மணியம் தோட்டத்தில்

## ஐஸ் போதையுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மணியம் தோட்டம் பகுதியில் ஒரு கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 21 வயது இளைஞர் ஒருவர் நேற் றுக் கைது செய்யப்பட்டுள் ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

சங்குப்பிட்டியில் பெண்ணின் சடலம் மீட்பு

## நீதி கோரிப் போராட்டம் முன்னெடுக்க நீதிமன்றம் தடை

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டியில் கடந்த வாரம் சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பப் பெண்ணின் படுகொலைக்கு நீதிகோரி இன்றையதினம் முன்னெ டுக்கத் திட்டமிடப்பட்டிருந்த கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள் ளது.

ஊர்காவற்றுறை நீதிமன் றத்தின் தடை உத்தரவு அறிக்

23ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 25 - 01 - 1936

உதிர்வு 12 - 10 - 2025



# யோகம்மா பாலசிங்கம்

யாழ். புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வதிவிடமாகவும் கனடா Mississauga வை வசிப்பிடமாகவும் கொண்ட யோகம்மா பாலசிங்கம் அவர்கள் கடந்த 12.10.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாலசிங்கம்(பொலிஸ்) அவர்களின் அன்பு மனைவியும் யோகினி, பாலினி, பாலயோகேந்திரன், பாலி, கண்ணன், நந்தினி, பாலநிர்மலன், ஸ்ரீதர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ராமநாதன், அப்பன், ரஞ்சினி, பாபு, ஸ்ரீவித்யா, நவீந்திரராஜா, ராம்ஜா, கோசி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பொன்மலர், ரத்தினகோபால், பாக்கியம், சிவபாதம், சரஸ்வதி, மகாலிங்கம், பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவஞானம், விநாயகமூர்த்தி, சரஸ்வதி, தங்கவேலாயுதம் மற்றும் சிவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சறோஜினிதேவி, காலஞ்சென்ற குணவீரசிங்கம், தேவரஞ்சிதமலர், சத்யநாதன், காலஞ்சென்ற சற்குணநாதன், சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான பாலசுப்ரமணியம், செல்லாச்சிப்பிள்ளை, வெற்றிவேலு மற்றும் கமலா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு உடன்பிறவாச் சகோதரியும் நிஷா, துஷி, ஆஷா, கோசா, ராம்ஜிகன், சந்துரு, விவேக்கா, தூரன், சிந்து, கிருஸ், ஜெனி, ப்ரியா, பிரவீன், லக்சா, சகா, லக்சன், நிலூ, நிசான், நிக்சன், உத்தமன், தமிழ்ச்செல்வன், வினோத், விதுசா, சஜிகா, தரன், நிர்ஜிகா, தினேஷ், நவிஜிகன், நன்ஜிகா, சஞ்சிகன், டானிக்கா, ரக்ஷிகா, ஐஸ்வியா, ஜீவத்ஸ்னா, சிரேனா, றிசாப் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ராம்சரன், ராஜா, மாறன், காஜோல், ஷனயா, றிகான், வீரன், ஷயா, அதீனா, அசீனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.10.2025 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இடம்பெற்று தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பாலசிங்கம் நிர்மலன் (மகன்) : 4163124352

தகவல் : குடும்பத்தினர்

(5687)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தம் 25 ஆயிரம் பேரை ஊனமாக்கும் வீதி விபத்துக்கள்!

## சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**வீதி விபத்துகளால் ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட 25,000 பேர் கடுமையான, நீண்டகால காயங்களுக்கு ஆளாகின்றனர் என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய விபத்து மாநாடு நடைபெறுவதற்கு முன்னதாக இது தெரியவந்துள்ளது.

தேசிய விபத்து செயலகத்தின் கூற்றுப்படி, நாடு முழுவதும் வீதி விபத்துகளில் ஒவ்வொரு நாளும் ஆறு முதல் எட்டு பேர் இறக்கின்றனர், அதே நேரத்தில் அரசு மருத்துவமனைகளில் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் விபத்து தொடர்பான காயங்களுக்கு சிகிச்சை பெறுகின்றனர்.

"நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு இணங்க, 2020 ஆம் ஆண்டு நிலைகளுடன் ஒப்பிடும்போது, 2030 ஆம் ஆண்டுக்குள் வீதி விபத்து இறப்புகளை 50% குறைக்க இலங்கை இலக்கு வைத்துள்ளது" என்று செயலகம் தெரிவித்துள்ளது. (நி)

# தரம் 1, தரம் 6 மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படாது

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கு தரம் ஒன்று மற்றும் தரம் 6 மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள் வழங்கப்பட மாட்டாது என கல்வி அமைச்சு தெரிவித்தது.

புதிய கல்வி சீர்திருத்தங்களின் பிரகாரம் இந்த மாணவர்களுக்கு செயன்முறை புத்தகங்கள் மற்றும் வழிகாட்டல் புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

இவற்றை அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த தரங்களுக்கான மாணவர்களின் புத்தகப் பைகளின் நிறை குறைவடையும் எனவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

# 18 இலட்சத்தை தாண்டிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை

(கொழும்பு)

2025 ஆம் ஆண்டில் இது வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வந்த வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 18 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையான சுற்றுலாப் பயணிகள் குறித்த புதிய புள்ளி விபரங்களை வெளியிட்டுள்ளதன் மூலம் இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2025 இல் இதுவரையான காலப்பகுதியில் 1,801,151 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதுடன், ஒக்டோபர் மாதத்தின் முதல் 15 நாட்களில் மட்டும் 75,657 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# ஒரே நாளில் சடுதியாக குறைந்த தங்கத்தின் விலை

(கொழும்பு)

நாட்டில் தற்போது தங்கத்தின் விலை நாளுக்கு நாள் ஒப்பிடுகையில் பாரிய உச்சத்தை அடைந்து வருகின்றது.

இதன்படி, இலங்கையில் தங்கத்தின் விலை நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும் போது குறைவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் ரூ.410,000 ஆக இருந்த "24 கரட்" தங்கத்தின் விலை நேற்று ரூ.390,000 ஆக குறைந்துள்ளது.

அத்துடன் ஒரு பவுண் "22 கரட்" தங்கத்தின் விலை ரூ.360,800 ஆக குறைந்துள்ளது.

சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை 4,230 அமெரிக்க டொலரை அடைந்துள்ளமையினால் இவ்வாறு தங்கம் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 05.10.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர். தேசோமயானந்தம் தேவசிகாமணி

[தேவக்கிளி]

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 20.10.2025 திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று ஊறணி புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத்தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் மதியம் 12 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் மற்றும் மலர்வளையம் அனுப்பியும் எம் துயரத்தில் பங்குகொண்ட உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எம் குடும்பத்தின் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிவகுரு வித்தியாசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

(C-4134)

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

# மிக்கேற்பிள்ளை வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது வட்டுவாகல் உதயசூரியன்




முல்லைத்தீவு மாவட்ட உதை பந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் அளம்பில் இளந் தென்றல் விளையாட்டுக் கழகம் நடத்திய 2025 ஆம் ஆண்டுக்கான அமரர் மிக்கேற்பிள்ளை ஞாபகார்த்தக் கிண்ண போட்டியின் இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை மாலை அளம்பில் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இருபெரும் துருவங்களான செம் மலை உதய சூரியன் அணியினை எதிர்த்து வட்டுவாகல் உதய சூரியன் அணியினர் களமிறங்கியிருந்தனர்.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிச் சமரில் வட்டுவாகல் உதய சூரியன் அணியினர் ஒரு கோலினை பெற்று வெற்றிவாகை சூடியிருந்தனர்.

போட்டியின் இறுதியில் வெற்றி பெற்றவர்களுக்கு காசோலையும், கேடயங்களும், பதக்கங்களும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டிருந்ததுடன் கலந்துகொண்ட அதிதிகளுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது.

இளம்தென்றல் விளையாட்டு கழகத்தின் தலைவர் குறித்த போட்டியில் ஜெசீலன் தலைமையில் ஆரம்பமான குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-299)

## மகளிர் உலகக் கிண்ணம்

# இலங்கையை எளிதில் வீழ்த்தி தென்னாபிரிக்கா அபாரம்

13 ஆவது மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்நிலையில், கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இலங்கை, தென்ஆபிரிக்கா அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

அதன்படி இலங்கை அணி முத லில் துடுப்பாட்டம் செய்தது.. அந்த அணி 12 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 46 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

சில மணிநேரங்களுக்குப் பிறகு மழை நின்றதால் போட்டி 20 ஓவராகக் குறைக்கப்பட்டது.

இறுதியில் இலங்கை அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 105 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து, டக்வொர்த் லீவிஸ் முறைப்படி 20 ஓவரில் 121 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என தென் ஆப்பிரிகாவுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

தொடக்க ஜோடி பொறுப்புடன் ஆடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. இருவரும் அரை சதம் கடந்தனர்.

வோல்வோர்ட் 60 ஓட்டங்களும், தஜ்மின் பிரிட்ஸ் 55 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இறுதியில் தென் ஆபிரிக்கா அணி விக்கெட் இழப்பின்றி 125 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அத்துடன் புள்ளிப்பட்டியலில் 2 ஆவது இடத்துக்கும் முன்னேறியது. (3)



## போதை...

பிரதிநிதிகளுடனான கூட்டம் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கடற்றொழிலாளர்களை சில போதைப்பொருள் மாபியாக்கள், போதைப்பொருள் கடத்தலுக்காக பகடைக்காய்களாகப் பயன்படுத்துவதற்கு முற்படுகின்றனர்.

அந்த மாபியாக்களின் வலைகளில் நாம் சிக்கிவிடக்கூடாது. ஆசை வார்த்தைகளை நம்பிவிடக்கூடாது.

சட்டவிரோத நடவடிக்கையென்பது எப்போதும் ஆபத்தானதாகவே இருக்கும். எனவே போதைப்பொருட்களை முடிவுகட்டுவதற்குரிய அரசாங்கம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் வேலைத்திட்டத்துக்கு கடற்றொழிலாளர்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

கடல்மார்க்கமாகவே அதிகளவு போதைப்பொருள் கடத்தப்படுகின்றன. எனவே கடற்றொழிலாளர்களை அந்தக் கும்பல் இலகுவில் இலக்கு வைக்கலாம். இது பற்றி மீனவ அமைப்புகள் விழிப்பாக இருக்க வேண்டும். தமது தொழிலாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு உடந்தையாக இருந்தால் சட்டத்தின் பிடிக்குள் இருந்து தப்ப முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். (ம-7)

## யாழ். போதனா...

முன்னிட்டு விசேட தபால் தலை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, 1850ஆம் ஆண்டு “ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலை" என்ற பெயரில், அந்த காலத்திய அரசாங்க அதிபர் அவர்களால், அவருடைய நண்பர்களுடன் இணைந்து சிறிய அளவில் நிறுவப்பட்டது.

பின்னர் 1907ஆம் ஆண்டு, இவ்வைத்தியசாலைக்கு “யாழ்ப்பாணம் சிவில் வைத்தியசாலை" என்ற புதிய பெயர் வழங்கப்பட்டு, அதன் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டன.

அதற்குப் பிறகு, 1956ஆம் ஆண்டு, இது “யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை" என மாற்றப்பட்டது.

1980ஆம் ஆண்டு, இவ்வைத்தியசாலை "யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை" (Jaffna Teaching Hospital) என பெயர் மாற்றம் பெற்று, அன்றிலிருந்து அதே பெயரில் தொடர்ந்தும் செயற்பட்டுவருகிறது.

இந்நிலையில், எதிர்காலத்தில் “தேசிய வைத்தியசாலை" (National Hospital) என்ற அடிப்படையில் இந்த வைத்தியசாலை உயர்த்தப்படுவ்தற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் 175 ஆண்டு சேவையை நினைவுகூர்ந்து, பல்வேறு விழாக்கள் மற்றும் நிகழ்வுகள் வைத்தியசாலையில் நடைபெற்றன. அதன் முதல் கட்டமாக, விசேட தபால் தலை (Commemorative Stamp) ஒன்று இலங்கை அஞ்சல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.

இந்த விழாவில் மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர், வைத்திய நிபுணர்கள், மருத்துவர்கள், தாதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

அஞ்சல் திணைக்களத்தின் உதவி அஞ்சல் அத்தியட்சகர் நாயகம், வடமாகாண உதவி அஞ்சல் அத்தியட்சகர் நாயகம் மற்றும் அஞ்சல் துணைக்கிளை உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த விசேட தபால் தலையை வெளியிட்டனர்.

பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகளும் விழாவில் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (ம-7,33)

## பொருளாதார...

கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

2022 ஆம் ஆண்டு தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியின் விளைவாக கடும் பின்னடைவுக்கு முகங்கொடுத்திருந்த இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தின் அனுசரணையுடனான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தியதன் நன்மைகளை இப்போது அனுபவித்துவருவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், இலங்கையில் நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் பொருளாதாரம் வெகுவாகப் பின்னடைந்திருந்தது. இருப்பினும் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் கடந்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் 5 சதவீதம் எனும் வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. அதன் நீட்சியாக இவ்வருடமும், அடுத்த வருடமும் பொருளாதார வளர்ச்சி 4.2 சதவீதமாகப் பதிவாகும் என மதிப்பிடப்பட்டிருப்பதுடன் எதிர்வருங் காலங்களில் அது 3 சதவீதத்தை அண்மித்த மட்டத்தில் பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தோமஸ் ஹெல்பிளிங் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை தற்போதைய பொருளாதார அடைவுகளைத் தக்கவைத்துக்கொள்வதற்கு அச்செயற்றிட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் பெரும்பாகப்பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணல் மற்றும் கட்டமைப்பு ரீதியான நடவடிக்கைகளை வலுப்படுத்தல் என்பன நீண்ட கால அடிப்படையிலான வெற்றிக்கு அவசியம் எனத் தெரிவித்துள்ள அவர், நிதியியல் ஸ்திரத்தன்மையும், அரசுக்குச் சொந்தமான கட்டமைப்புக்களின் நிதியியல் இயலுமையும், சாத்தியமான நிதியியல் அச்சுறுத்தல்களைக் குறைப்பது என்பனவும் அதற்கு முக்கிய பங்களிப்புச் செய்யும் எனக் கூறியுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராம கல்வாரி தேவாலயத்தின் "மகிழ்ச்சியான குடும்பம்" சிறுவர் அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாட்டில், சிறுவர் தினம் கடந்த 14 ஆம் திகதி பூநகரி கௌதாரி முனை கடற்கரைப்பகுதியில் கொண்டாடப்பட்டது. (படம்: தேவானந்தன்)



புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இருக்கும் கலைஞர்களை ஊக்கப்படுத்தி வளர்த்தெடுக்கும் நோக்கோடு பிரதேச பண்பாட்டுடன் தொடர்புடைய பழமை வாய்ந்த நாட்டுக் கூத்தான காத்தவராயன் கூத்து போட்டியானது கடந்த 12 ஆம் திகதி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பொன் விழா மண்டபத்தில் சிறப்பான முறையில் இடம்பெற்றது. (படம்:சதீஸ்)



வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் வல்வை முத்துமாரியம்மன் ஆலய பிரதம குருவும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய தண்டபாணிக தேசிகர் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (படம்:மகாலிங்கம்)










வடக்கு மாகாண மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சினால் மகளிருக்கான இரண்டாம் கட்ட வாழ்வாதார உதவித்திட்டமானது யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக சிபாரிசு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நேற்றைய தினம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் கலந்துகொண்டு உதவித்திட்டங்களை வழங்கி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தில் குடும்ப வன்முறைகள் அதிகரிப்பு

## குடிசார் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

**வவுனியா மாவட்டத்தில் குடும்ப வன்முறைகள் அதிகரித்து வருவதன் காரணமாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பாதுகாப்பு இல்லம் ஒன்று அவசியமானதாக காணப்படுவதாக வவுனியா மாவட்ட குடிசார் அமைப்புக்களினுடைய பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

கடந்த புதன்கிழமை கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாண ஊராட்சிமுற்றக் கலந்துரையாடலின் போதே அவர்கள் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்

வடக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் வவுனியா மாவட்டத்தில் குடும்ப வன்முறை அதிகரித்து வருகின்றது.

இதனால் பெண்களும் அவர்களுடைய குழந்தைகளும் உடல், உள ரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.

எனவே பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க மாவட்டத்தில் பாதுகாப்பு இல்லம் அமைக்கப்படுவது அவசியமானதாகக் காணப்படுகின்றது.

பாதுகாப்பு இல்லம் இன்மையால் அவர்கள் தொடர்ந்தும் வன்முறைகளுக்கு ஆளாகின்றனர்.மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதுடன்-பிள்ளைகளுடைய கல்வி மற்றும் பாதுகாப்பும் பாதிக்கப்படுகின்றது என மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் குடும்ப வன்முறைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் மாத்திரமே குடும்ப வன்முறைகளைக் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவித்திருந்தார். (8-30)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் குறுகிய கால ஆங்கில கற்கைநெறிக்கான (Short cours in Listening an Speech Programme) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 16 வயதிற்கு மேற்பட்டவராகவும் க.பொ.த சாதாரண தரத்தில் முதலாம் மொழி, கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விணணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

---

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் மென்பொருள் பொறியியலில் இளமாணிப்பட்டக் கற்கைநெறி நடைபெறவுள்ளது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கல்விப் பொதுத் தராதரப்(உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 4.1.2026 அன்று நடத்தப்படும் தேர்வுப் பரீட்சையிலும் சித்தி பெற்றிருத்தல் கட்டாயமானது. அத்துடன் விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 30.11.2025 வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு 021 222 3374 தொலைபேசியூடாகவும் கொக்குவில் பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (8)

# கந்தபுராண உள்ளொளி நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கந்தபுராண உள்ளொளி நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வட்டு மேற்கு, செந்தில் முருகையா திருக்கோவில் மண்டபத்தில் யாழ். வலய ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய கணக்காளர் நாயகம் ஞா.தேவஞானம், சிறப்பு விருந் தினர்களாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் கா.கண்ணன், மோ.கோகுலன் (யாழ். பல்கலைக் கழகம்) மற்றும் உயிர் மருத்துவப் பொறியியலாளர் க.விசுவநாதம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் கௌரவ விருந்தினர்களாக சைவப்புலவர் வ. தயாபரசிவம் (ஓய்வுநிலை பொறியியலாளர்), வைத்தியகலாநிதி நா.கணேசலிங்கநாதன், ஓய்வு பெற்ற வட மாகாண கல்விப் பணிப்பாளர் சி.தட்சணா மூர்த்தி, யாழ். ஆசான் வெளியீடு இயக்குநர் து.நிருஷன், ஓய்வு நிலை அதிபர் தி.மோகனபாலன், ஓய்வுநிலை புகையிரத நிலைய அதிபர் சி. பாலசுப்பிரமணியம், ஓய்வு நிலை கணித ஆசிரிய ஆலோசகர் த. சண்முகலிங்கம் மற்றும் ஓய்வு நிலை ஆசிரியர் ப.கோகுலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)


# நூல் வெளியீட்டு விழா

## கந்தபுராண உள்ளொளி

**கதை அம்சத்துடன் மிக முக்கிய பாடல்கள் 1000 தொகுத்து இணைக்கப்பட்டு- பொழிப்பும் இடம் பெற்றுள்ளது.**

நூலாசிரியர் - வைத்திய கலாநிதி முருகு நல்லசேகரம்பிள்ளை J.P

காலம் ~ 20.10.2025 திங்கட்கிழமை -தீபாவளி திருநாள்
நேரம் - பி.பகல் 3.00 மணி

இடம் ~ செந்தில் முருகையா ஆலயம், வட்டு மேற்கு

தலைவர் - பொ.ரவிச்சந்திரன்
(ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம்)

*பிரதம விருந்தினர்*
திரு.ஞா.தேவஞானம்
(இளைப்பாறிய கணக்காளர் நாயகம், உறுப்பினர் கணக்காய்வு சேவையாளர் ஆணைக்குழு

*சிறப்பு விருந்தினர்*
பேராசிரியர் கா. கண்ணன்
(யாழ். பல்கலைக்கழகம்)
மோ.கோகுலன்
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
திரு.க. விசுவநாதம்
(உயிர் மருத்துவப் பொறியியலாளர்)

*வெளியீட்டுரை*
திரு.மா.கணநாதன்
(பண்டிதர், சைவப் புலவர், வைத்தியர்)

*மதிப்பீட்டுரை*
திரு. செ.கந்த சந்தியதாசன்
(சைவப்புலவர்)

*நன்றியுரை*
சைவப்புலவர் திருமதி சண்முக வடிவு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்திய கலாநிதி.முருகு நல்லசேகரம்பிள்ளை,
குடும்பத்தினர்.

(5683)


# நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பவளவிழா மண்டபத்தில் அதிபர். வ.நந்தீஸ்வரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண நிதி - பிரதி பிரதம செயலாளர் இ. சிவரூபன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. சிவசிவா, கௌரவ விருந்தினராக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரும் பழைய மாணவருமான க. ஜெசிந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் ஆசியுரையினை கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன், நினைவுப் பேருரையினை கனடா சண்டிலிப்பாய் ஐக்கிய மன்றத்தின் வெளியீடுகள் இயக்குநர் க. கேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டு மாதங்கள் தலைமறைவு

## எட்டமுடியாத எல்லைகளைக் கடந்த செவ்வந்தி சிக்கியது எப்படி?

கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி கொழும்பு புதுக்கடை நீதிமன்றின் குற்றக்கூண்டில் வைத்து பாதாள உலகக் குழுவின் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட வழக்கில் தேடப்பட்டு வந்த இஷாரா செவ்வந்தியை கடந்த 15ஆம் திகதி ASP ஒலுகல்ல தலைமையிலான விசேட பொலிஸ் குழு நேபாளத்தில் வைத்துக் கைது செய்தது.

கடந்த எட்டு மாதங்களாக இலங்கை பாதுகாப்புத் தரப்பினருக்கு டிமிக்கி கொடுத்து, அவர்களின் கண்களில் விரலை விட்டு ஆட்டிய செவ்வந்தியை கைது செய்தமை இலங்கையை மீண்டுமொருமுறை உலக நாடுகள் உற்றுநோக்கியுள்ளது.

செவ்வந்தி தொடர்பான தகவல்களை அண்மையில் இந்தோனேசியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட 5 பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களே வழங்கியிருந்தனர் என்பது விசாரணைகளில் தெரியவந்திருக்கின்றன.

செவ்வந்தியைக் கைது செய்த விடயம் ஒரு திரைப் படத்தைப் பார்ப்பது போல இருப்பதாகப் பலரும் கூறி வரும் நிலையில், ASP ஒலுகல்ல தலைமையிலான பொலிஸ் குழுவினர் மிகத் திறம்படத் திட்டமிட்டு குறித்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் அனைவரும் நேபாளம் செல்வதற்கான முதல்படி நிலையாக; தம்மில் எவருக்கும் சந்தேகம் வராதபடி சுகயீன விடுமுறையைக் கொடுத்துவிட்டு வீட்டில் ஒய்வெடுப்பது போல பாசாங்கு செய்து நேபாளம் பறந்தனர்.





நேபாளத்தில் முதலில் கைதுசெய்யப்பட்டவர் ஜே.கே.பாய். அவரை வைத்தே செவ்வந்தியின் இருப்பிடத்தை அறிந்து கொண்டனர் நேபாளப் பொலிஸார்.

அதனைத் தொடர்ந்து நேபாள பொலிஸ் மற்றும் சர்வதேசப் பொலிஸாருடன் இணைந்து நேபாளத் தலைநகரத்திலிருந்து 18 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள விவசாயக் கிராமத்தில் மலை உச்சியில் செவ்வந்தியும் அவரின் குழுவினரும் தங்கியிருந்த சொகுசு பங்களாவை சுற்றி வளைத்து ஜே.கே.பாயினூடாக செவ்வந்தியை வெளியே அழைத்து வந்து அவரைக் கைது செய்தனர்.

செவ்வந்தியுடன் ஜே.கே. சுரேஸ், யப்னா சுரேஸ், தக்ஷி, நீர்கொழும்பு பாபா ஆகியோரையும் மடக்கிப் பிடித்துள்ளனர் பொலிஸார்.

இதில் தக்ஷி என்பவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்றும் இவர் செவ்வந்தியின் முகச்சாயலை உடையவர் என்பதும் தெரிய வந்துள்ளது.

செவ்வந்தியிடமிருந்து கடவுச்சீட்டு ஒன்று மீட்கப்பட்டிருந்தது. அதில் செவ்வந்தியின் படமும் வேறு ஒருவருடைய பெயரும் இருப்பதாகவும் அதனூடாக அவர் வெளிநாடொன்றிற்குத் தப்பிச் செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தகவல் வெளியாகியுள்ளது.

ASP ஒலுகல்ல செவ்வந்தியைக்கைது செய்த போது; "ஒரு நாளைக்கு நீங்கள் என்னைக் கைது செய்வீர்கள் என்று என்மனம் கூறிக்கொண்டே இருந்தது. தலைமறைவாய் இருப்பதைவிட இலங்கைக்குச் சென்றுவிடலாமோ என பலமுறை சிந்தித்திருக்கின்றேன்." எனச் செவ்வந்தி கூறியிருப்பதான தகவல்களும் வெளியாகியிருக்கின்றன.

நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட செவ்வந்தி உள்ளிட்ட ஆறு பேரும் மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன.

நீதிமன்ற துப்பாக்கிச் சூட்டின்பின் தான் தலைமறைவாகி ஒன்றரை மாதங்கள் மத்துகம பகுதியிலும் அதன்பின் மாத்தறையிலும் தங்கியிருந்து பின்னர் கிளிநொச்சிக்குச் சென்று, கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் சென்று, யாழ்ப்பாணத்திலிருந்து படகு மூலம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றதாகவும் அங்கிருந்து புகையிரதம் மூலமாக நேபாளத்திற்குச் சென்றதாகவும் கூறினார்.

கணேமுல்ல சஞ்சீவை சுட்டுக்கொன்ற துப்பாக்கியை, கெஹல்பத்திர பத்மேயின் பணிப்பில் தன்னுடன் எடுத்துச் சென்றதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை செவ் [illegible]

நேபாளம் செல்வதற்கு 65 இலட்சத்திற்கும் மேல் செலவளிக்கப்பட்டுள்ளதான தகவல்களும் வெளியாகி இருக்கின்றன.

இந்நிலையில் தற்போது மேலுமொரு தகவல் ஊடகங்களில் வெளியாகியிருக்கின்றன. அதாவது, கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி கணேமுல்ல சஞ்சீவை சுட்டுக் கொல்வதற்காக வழக்கறிஞர் வேடமணிந்து, புதுக்கடை நீதிமன்றில் வழக்கறிஞர் ஓய்வறையில் இருந்தபோது ஒரு பெண் என்னிடம் வந்து தனது கணவன் தன்னைத் துன்புறுத்துவதாகவும் அதிலிருந்து விடுபட தனக்காக சட்ட ஆலோசகராக செயற்படுமாறும் கேட்டிருந்தார். எனக்கு வேறு ஒரு வழக்கு இருக்கிறது என அவரை வேறு ஒருவரிடம் அனுப்பிய போது, அவர் தன்னிடம் பணம் இல்லை எனக் கூறியுள்ளார்.

நான் அவரை தனியாக அழைத்துச் சென்று என்னிடம் இருந்த ஐயாயிரம் ரூபாவைக் கொடுத்தேன். அவர் என்னைக் கைகூப்பி வணங்கினார் என்றும் கூறியுள்ளார் செவ்வந்தி.

பாதாள உலகக் குழுவின் ஓங்கியிருந்த கையை இரும்புக் கரத்தால் இறுகப் பற்றியிருக்கிறது இலங்கைப் பாதுகாப்புத்துறை.

செவ்வந்தி உள்ளிட்ட குழுவினரிடம் தீவிர விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.

செவ்வந்தியின் கைது பல அரசியல்வாதிகளுக்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கிடமில்லை.

செவ்வந்தியின் கைதினூடாக கணேமுல்ல சஞ்சீவ கொலை தொடர்பான பல உண்மைகள் வெளியாகப் போகின்றன.

மேலும் பல திடுக்கிடும் திருப்பம் நிறைந்த விடயங்களும் வெளியாகலாம். இந்த உண்மைக்குள் சிக்கப் போகும் பல பெரிய புள்ளிகளை தட்டித்தூக்கக் காத்திருக்கின்றது ASP ஒலுகல்ல தலைமையிலான பொலிஸ் குழு.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வாக்குறுதியில் பாதாள உலகக் குழுவை ஒழித்தல் என்பதும் பிரதானமான வாக்குறுதியாக இருப்பதால் இலங்கையிலிருந்து பாதாள உலகக் குழுவை முற்றாக ஒழிக்கும் வரை வேட்டை தொடரும் என்கிறது அநுர அரசு.

எது எப்படியோ பாதாள உலகக் குழுவின் போதை வலையமைப்பு முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

இதுவே இலங்கையின் எதிர்காலத்துக்கு மிக நல்லது.

அபிமன்யு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



இளையதம்பி இரட்ணம்



## சிறிய பாடசாலைகளை மூடினால் மாணவர் இடைவிலகல் அதிகரிக்கும்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்து ஓய்வு பெற்ற இளையதம்பி இரட்ணம் அவர்கள் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு வர்த்தக பாடத்தை மிகவும் சிறப்பாகக் கற்பித்த ஆசான் இரட்ணம் அவர்கள் பகைமை பாராட்டாத ஓர் அற்புதமான மனிதர். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் நிலவிய அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** எங்கட வடக்கு மாகாணக் கல்வி நிலை தொடர்பில நாங்கள் அதீத கருசனை கொள்ள வேண்டும்.

2024 ஆம் ஆண்டு சாதாரண தரத்தின்ர பெறுபேற்றில எங்கட வடக்கு மாகாணம் தான் கடைசியில இருக்குது. இந்த நிலையில அண்மையில வெளியாகியிருந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களம் பகுப்பாய்வு செய்திருந்தது. அதில, 70 புள்ளிகளுக்கும் குறைவாகப் புள்ளிகளைப் பெற்ற மாகாணங்களில வடக்கு மாகாணம் முதல் இடத்தில இருக்குது.

**மூப்பர்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள். அப்ப எங்கட வடக்கு மாகாணம் முதல் இடத்திற்கு வந்திட்டுதோ.

**வாத்தியார்:-** மூப்பர்! கடைசியில நாங்கள் தான் முதலிடம். அதாவது, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில இரண்டு பாடங்களில் ஒவ்வொன்றிலும் 35 புள்ளிகளைப் பெற்று 70 புள்ளிகளை ஒரு மாணவன் எடுப்பானாக இருந்தால், அந்த மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில சித்தியடைந்துள்ளார் என்பது பரீட்சைத் திணைக்களத்தின்ர கணிப்பு.

இதில இந்த 70 புள்ளிகளைக் கூடப் பெற முடியாத மாணவர்கள் அதிகமாக இருக்கிற மாகாணம் எங்கட வடக்கு மாகாணம் என்பதைப் பரீட்சைத் திணைக்களத்தின்ர புள்ளிப் பகுப்பாய்வு உறுதி செய்திருக்குது.

**கங்காணி:-** தெரியாமல் தான் கேட்கிறன் ஐந்து வருடமாகப் படித்த ஒரு மாணவன், ஒரு பாடத்தில் 35 புள்ளிகளைக் கூடப் பெறமுடியவில்லை எண்டால், இஞ்ச என்ன நடக்குது.

**பண்டிதர்:-** முதன் நிலை- இரண்டாம் நிலை - மூன்றாம் நிலைகளில அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி எல்லாவற்றிலும் மாணவர்கள் அடைவு மட்டத்தை எட்டியிருப்பதாகப் பாடசாலைப் பதிவேடுகள் உறுதி செய்கின்றன.

ஆனால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில இலங்கையிலுள்ள அனைத்து மாகாணங்களிலும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களில் அநேகர் 70 புள்ளிகளைத் தாண்ட முடியவில்லை எனும் போது, எங்கோ சிக்கல் உண்டு என்பது தெரிய வருகுது.

**விதானையார்:-** என்னைப் பொறுத்த வரையில எழுத, வாசிக்கத் தெரியாத மாணவர்கள் இருந்தால் மட்டும் தான் 70 புள்ளிக்குக் குறைவான அடைவு மட்டம் கிடைக்கும்.

உண்மையில தரம் ஐந்தில எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்கள் இருந்தால், அதைவிட்ட துன்பம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

**கங்காணி:-** விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. தரம் 5 இல எழுத, வாசிக்கத் தெரியாத மாணவரால ஆறாம் தரத்திற்கு ஈடு கொடுக்க முடியாது. தவிர அந்த மாணவனுக்கு படிப்பில வெறுப்பு ஏற்படும். இதன் காரணமாக பாடசாலைக்கு வருவதை அந்த மாணவன் தவிர் ப்பான். தொடர்ந்து பாடசாலையை விட்டு இடைவிலகல் நடக்கும்.

ஆகையால தயவு செய்து எங்கட கல்வி சார்ந்த அனைவரும் கடும் முயற்சி செய்து எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களை எழுதவும் வாசிக்கவும் வைக்க வேணும்.

உண்மையில ஆசிரியர்கள் மனம் வைத்தால், மாணவர்களை எழுத வாசிக்கச் செய்யிறது பெரிய காரியமில்லை.

இவ்வாறு கங்காணி கூறியதும் ஆலடி மாநாடு நிசப்தமாகியது.

நிசப்தத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:-** அது சரி ஐம்பதுக்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலைகளை மூடப் போறதாகக் கதை வருகுது. என்ன சங்கதி.

**வாத்தியார்:-** ஓ! ஐந்து மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் எண்ட நிலை இருக்கும் போது, அது பற்றி அரசாங்கம் கவலை கொள்ளுது.

ஆனால் இந்த சிறிய பாடசாலைகள் இயங்குவதால தான், குறித்த அந்த மாணவர்கள் படிக்கினம். பாடசாலைக்கு வருகினம்.

குறித்த பாடசாலையை இன்னொரு பாடசாலையுடன் இணைக்கும் போது, அந்த மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில தடையும் இடர்பாடும் ஏற்படும்.

என்னைப் பொறுத்த வரை சிறிய பாடசாலைகளை மூடிவிட்டால் ஏழை குடும்பங்களில உள்ள மாணவர்களின்ர பாடசாலை இடைவிலகல் அதிகரிக்கும்.

இன்னும் சுருக்கமாகச் சொன்னால், மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீடுகளிலும் தெருக்களிலும் திரியிற நிலைமை உருவாகும்.

**மூப்பர்:-** அப்ப வாத்தியார்; குறைந்த மாணவர்கள் உள்ள பாடசாலைகளை அப்படியே இயக்க வேணும் எண்டு சொல்லுறியளோ.

**வாத்தியார்:-** நான் அப்படிச் சொல்லவில்லை. என்னைப் பொறுத்த வரை குறைந்த மாணவர்களுடன் பாடசாலைகள் இயங்குவது ஆரோக்கியமான விடயமல்ல.

அதற்காக அத்தகைய பாடசாலைகளை மூடிவிடாமல், அதிகளவு மாணவர்களைக் கொள்வனவு செய்கின்ற பாடசாலைகளைக் கட்டுப்படுத்தி, சிறிய பாடசா லைகளுக்கும் மாணவர்கள் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேணும்.

இல்லை எண்டால், சிறியபாடசாலைகளையும் பிரபலமான பாடசாலைகளையும் இணைத்து பெரிய பாடசாலையின்ர, மாணவர்களைப் பங்கீடு செய்து சிறிய பாடசாலைகளையும் இயக்க வேணும்.

இதை விட்டிட்டு எடுத்த எடுப்பில குறைந்த மாணவர்கள் உள்ள பாடசாலைகளை மூடிவிட்டால் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

**சிறாப்பர்:-** வாத்தியார் சொல்லுறது உண்மை தான். யாழ்ப்பாண நகரத்தில கே.கே.எஸ் வீதியில உள்ள லேனில பாரதி பாசா வித்தியாலயம் எண்டொரு பாடசாலை இருந்தது.

ஒரு காலத்தில நிறைய மாணவர்கள் அங்கு படித்தனர்.

ஏதோ காரணத்தால அந்தப் பாடசாலை மூடப்பட்டது.

இப்ப அந்தப் பாடசாலைக் காணியும் கட்டிடமும் இராணுவத்தின்ர கட்டுப் பாட்டில இருக்குது.

உண்மையில அந்தப் பாடசாலை எங்கட யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின்ர சொத்து. அதை மீளப் பெற வேணும்.

தேவையெண்டால், அந்தப் பாடசாலையை யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின்ர கட்டுப்பாட்டிற்குள்ள கொண்டு வந்து, அதில ஒரு பகுதியில கடேற் இயங்குவதற்கு அனுமதி கொடுக்கலாம்.

ஆகையால எங்கட வடக்கு மாகாண கல்வி நிர்வாகம் இது விடயத்தில உடனடியாகத் தலையிட்டு யாழ்ப்பாணம் பாரதி பாசா வித்தியாலயத்தை படையினரிடம் இருந்து மீட்டெடுக்க வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கனகசபை கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வியாசர் பதில்கள்

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

## அநுர ஆட்சி எப்படி இருக்கிறது வியாசரே?

*சிவராஜ் - சாவகச்சேரி*

போதை ஒழிப்பு, பாதாள உலகக் குழுவை இல்லாதொழித்தல் என்பதில் நூறுவிகித செயற்பாடு.

வடக்குக் கிழக்கை தாண்டி நாடளாவிய ரீதியில் போதைப் பிரச்சினை வீட்டுக்கு வீடு இருந்து கொண்டுதான் இருக்கிறது.

இவ்வாறான நிலையில் இதை ஒழித்துக் கட்டுவதற்கு நாட்டு மக்கள் இன, மத, பேதமின்றி ஒத்துழைப்பு வழங்குவர்.

இதில் மாற்றுக் கருத்தேதுமில்லை.



செவ்வந்தி சிக்கிவிட்டாரே வியாசரே?

## தீபாவளிக் கொண்டாட்டத்திற்கு உடுப்பு வாங்கி விட்டீர்களா வியாசரே?

*ரேதுஷ் - மாதகல்*

ஒருவரிடம் தீபாவளிக்கு புத்தாடை எடுத்து விட்டீர்களா என்று கேட்டேன். ஓ... மழைக் கோட் ஒன்று வாங்கினேன் என்றார். எனக்கு குப்பென்று சிரிப்பு வந்து விட்டது.

ஒரு பெண்ணின் முகப்புத்தகப் பதிவு. புதிய ஆடை வாங்கினாலும் அன்று முழுவதும் நயிற்றியுடன் தானே வீட்டில் நிற்கப் போகின்றோம். பேசாமல் நயிற்றியையே வாங்கினால் என்ன?

எம் வடக்கு மாகாண யூற்றூப்பர்கள் ஒன்றில் உடுப்புக்கடைகளில் நின்று, ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்கிறார்கள். இல்லையெனின் ஏதாவது சாப்பாட்டுக்கடையில் நின்று இந்தக் கடையில் குடிநீர் கூட பயங்கர சுவையானது என்று உண்மையை மட்டும் சொல்கிறார்கள்.

நாடு எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறது. நாம் உடுப்புக் கடையிலும் சாப்பாட்டுக் கடையிலும் நிற்கின்றோம். கொஞ்சம் மாறலாமே.

## பொறுப்புக்கூறல் ஐ.நாவில் அங்கீகரிக்கப்படாவிட்டால் தமிழர் பிரச்சினை தீராதே?

*குமார்-யாழ்ப்பாணம்*

அங்கீகரிக்கப்பட்டால் மட்டும் தீர்ந்து விடுமா என்ன?

தமிழர் பிரச்சினை ஐ.நாவின் மேசை லாச்சிக்குள் இருக்கிறது போலவும் பொறுப்புக் கூறலை அங்கீகரித்த உடன் அதை எடுத்துத் தந்துவிடுவது போலவும் பேசுவதை நினைக்கும் போது சிரிப்பே வருகிறது.

தமிழினம் பட்ட வலிக்கான நிவாரணம் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இது வொன்றே.

இதை இலங்கை அரசு செய்யும் என்று நீங்கள் நினைத்தால் அதைக் குழி தோண்டிப் புதைத்து விடுங்களேன்.

## பூமியின் விசைச் சுற்று அதிகரித்து விட்டது போல் தெரிகிறதே வியாசரே?

*மகாலட்சுமி - உரும்பிராய்*

அதிகரிக்காமல் என்ன செய்யும். அவ்வளவுக்கு மனிதனின் அக்கிரமம் அதிகரித்து விட்டது.

தன் தாய் வீட்டிற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒரு அப்பாவிப் பெண்ணை கள்ள மண் ஏற்றிவந்த உழவு இயந்திரத்தால் மோதிப்பலி எடுத்துவிட்டு, அந்த இடத்தில் நிற்காமல் மணல் மண்ணைப் பறிக்க வேண்டிய இடத்தில் பறித்துவிட்டு பணத்தைப் பெற்றுக் கொண்டு பெண்ணை இடித்த தடயங்களை அழித்து விட்டு எந்தச் சலனமும் இல்லாமல் குறித்த இடத்துக்கு வரும் சமூகம் இருந்தால் இந்தப்பூமி சுழலும் வேகம் அதிகரிக்காமல் என்னத்தைச் செய்யும் சொல்லுங்கள்.

## வியாசரே வெள்ளைக் கொடி விவகாரத்தை எப்படி எடுத்துக் கொள்வது?

*சுதன் - குப்பிளான்*

உலக நாடுகளில் போர் மரபு என்று ஒன்று உண்டு. எந்த இராணுவமாக இருந்தாலும் அதை மதித்தே ஆகவேண்டும்.

ஆனாலும் எம் மண்ணில் அவ்வாறான மதிப்புகளோ, மரியாதைகளோ மனிதாபிமானங்களோ பார்க்கப்பட்டதாய், கடைப்பிடிக்கப்பட்டதாய் தெரியவில்லையே.

அனுபவிக்கக் கூடாத அத்தனை கொடுமைகளையும் அனுபவித்து விட்டு இன்று வரை நீதிக்காக சர்வதேசத்தின் படலையைத் தட்டிக் கொண்டு நிற்கிறது தமிழினம்.

## பயம் இன்றிப் பரீட்சையை எதிர்கொள்ள வியாசரின் அறிவுரை?

*சகிதா - மந்துவில்*

கல்வியில் பயபக்தி இருக்க வேண்டும். அப்போது தான் அது எம்மிடம் நிற்கும்.

பரீட்சைக்குப் பயம் என்பதை இரு வேறாக்கலாம். முதலாவது, நான் படித்தவை பரீட்சையில் வருமா என்ற பயம்-பதற்றம்.

இரண்டாவது, நான் படிக்கவே இல்லையே எதை எழுதுவது என்ற உதறல்.

இதில் நாமெல்லாம் இரண்டாவது ரகம். அதுசரி, சகிதா எந்த ரகம்?

## செவ்வந்தி சிக்கிவிட்டாரே வியாசரே?

*ரகு - கீரிமலை*

செவ்வந்தி சிக்கிவிட்டார். விசாரணைகள் நடக்கின்றன. இனி எந்தெந்த பூவந்திகள் சிக்கப் போகிறார்களோ?

இதில் தென்னிலங்கையில் பிரபல்யமான அரசியல்வாதி ஒருவர் பௌத்த பீடங்களை ஓடி ஓடிச் சந்திக்கிறார்.

எடுத்ததற்கெல்லாம் முந்திரிக்கொட்டையாய் முந்தி முந்தி அறிக்கை விடுகிறார்.

அட பதட்டப்படாதேயுங்கோ புறோ. முதுகிலை புண் இருந்தால் தானே காடு புகப் பயமாக இருக்கும்.

கனநாள் இல்லை. இன்னும் ஓரிரு நாளில் எல்லாம் பொது வெளிக்கு வந்து விடும்.

## பயங்கரமானவர்கள் இப்போது ரொம்ப நல்லவர்கள் போல் நடிக்கிறார்களே?

*தேவா - வதிரி*

உண்மை, விதை போல நீண்ட காலத்திற்கு மண்ணில் புதைந்து கிடக்காது.

என்றோ ஒரு நாள் அது மண்ணைத் துளைத்துக்கொண்டு வெளியே வரும்.

இதுபோல இந்தப் பயங்கரமானவர்களின் சுயரூப முகமூடி கிழிக்கப்பட்டே தீரும்.

நல்லவனாய் வாழ்வது கடினம். ஆனால் நல்லவன் போல் நடிப்பது சுலபம்.

செவ்வந்தி கைது விடயத்திலும் ஒருவர் அதிகம் துடித்துக்கொண்டிருக்கிறார்.

அப்போதே தெரிந்து விட்டது. அவரின் சுயரூபம் ஓ.. இவர்தான் அவரா என்று நீங்கள் குழம்புவது புரிகிறது.

இரண்டு நாள் பொறுங்களேன்.



வியாசரே வெள்ளைக் கொடி விவகாரத்தை எப்படி எடுத்துக் கொள்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த “பாதாள உலகக்குழு” தாதா அமரே?



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்



ராஜபக்ஷ குடும்பத்தின் மிகநெருங்கிய சகாவும் பிரபல பாதாள உலகத் தாதாவுமான யூலம்பிட்டிய அமரேவுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் ஐப்பசி 07, 2025 அன்று உறுதி செய்திருக்கிறது.

தங்கல்ல மேல் நீதிமன்றம் கார்த்திகை 2019, வழங்கிய மரண தண்டனைக்கு எதிராக யூலம்பிட்டிய அமரே, கொழும்பு மேல்முறையீடு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார். கார்த்திகை 2024, மேல்முறையீடு நீதிமன்றம், தங்கல்ல மேல் நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனையை உறுதி செய்தது. ஆனாலும் சற்றும் மனம்தளராத விக்ரமாதித்தனாய் முயன்று பார்த்தார் யூலம்பிட்டிய அமரே. உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். யூலம்பிட்டிய அமரே தன்னுடைய சட்டதரணிகள் மூலம் கொடுத்த மனுவை நிராகரித்தது உச்ச நீதிமன்றம். மூன்று நீதிமன்றங்களும் கைவிரித்து விட்டன. இனிமேல் இலங்கையில் முறையிட நீதிமன்றம் எதுவுமில்லை. இனி ஆண்டவரிடம்தான் முறையிட வேண்டும் அல்லது மைத்ரிபால சிறிசேனை, கோட்டாபாய ராஜபக்ஷ, ஜே.ஆர்.ஜெயவர்தன போன்ற ஆட்சியாளர்கள் அமைய வேண்டும். அப்படி ஓர். அதிஸ்டசாலி ஜனாதிபதி அமைந்தால்தான் பொது மன்னிப்பின் கீழ் யூலம்பிட்டிய அமரே வெளியே வரலாம்.

யார் இந்த யூலம்பிட்டிய அமரே? ஜீகான கமகே அமரசிறி என்னும் பெயர் கொண்டவர் யூலம்பிட்டிய அமரே என பிரபல்யமாக அறியப்படுபவர் ஆவர். அவர் சாதித்திருக்கும் சாதனைகள் என்ன என்ற கேள்விக்கு பதில்: 24 கொலை வழக்குகள், பதினைந்து கொள்ளை வழக்குகள் என்று ரொம்பவே எதிர்நிலையில் பிரகாசிக்கின்றன அமரேயின் சுயவிபர சமூகவிம்பம். இந்த யூலம்பிட்டிய அமரேயை மரண தண்டனையில் நிறுத்திய வழக்கு எது? அவர் அப்படி என்னதான் செய்தார்? அதை அறிவதற்கு அரசியல்வாதிகளால் போசிக்கப்பட்டு, காண்டாமிருகம் போல வளர்ந்து நின்ற பாதாள தாதாவின் இரத்த வரலாறுகளை நாம் சற்றேனும் அறிவது நன்று. யூலம்பிட்டிய அமரே இலங்கையின் தென்மாகாணத்தில் வெகுப் பிரசித்தம். அவருடைய சுயவிபரக் கோவையில் 06 வகுப்பு மட்டும் என்ற கல்வித் தகைமைக்கு அப்பால் துறைசார் நிபுணத்துவ அனுபவங்களாய், பெரும் நிழல் தரும் மரங்களை வெட்டி விற்றல், கஞ்சா கடத்துதல், கொலை செய்தல், கொள்ளை அடித்தல், கப்பம் கேட்டல், கள்ள மாடு வியாபாரம் என்று ஏகப்பட்டவை இருக்கின்றன. அமரே ஆரம்பத்தில் மகிந்த ராஜபக்ஷவின் ஒன்றுவிட்ட சகோதரி நிரூபமா ராஜபக்ஷவின் தோட்டக் காவலாளியாக இருந்தவர். இப்படி ஆரம்பித்த காவலாளி 18 வயதில் சிறைக்குச் சென்றார். இப்படித்தான் அமரேயின் ஆடுகளம் ஆரம்பமானது.

மித்தானியைச் சேந்த பஸ் வியாபாரி அமிலச்சூட்டி என்பவரை பிடித்து பகிரங்கமாய் அமரே செய்த கொலை பொலிஸ் ஆவணங்களில் இன்றளவும் பதபதைப்புடன் பேசப்படுகின்றது. அமரே, அமிலச்சூட்டியின் துப்பாக்கியைப் பறித்து அவரையே போட்டுத் தள்ளினார். அதன்மூலம் அமரேயின் திருநாமம் பட்டித்தொட்டியெங்கும் பிரபல்யமானது. அமரேயின் பலமான அரசியல் ஆதரவுத்தளத்தின் முன்னால் பொலிஸாருக்கு வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு வழியேதும் செய்ய முடியவில்லை. ஒருமுறை தன்னுடைய ஏற்றுமதி வியாபாரத்துக்காக நான்கு ஏக்கர் காணி ஒன்றுக்குள் புகுந்து பலா மரங்களை வெட்டிச் சாய்த்துக் கொண்டு இருந்தார் அமரே. இந்த அநியாயத்தைப் பார்ப்போர், கேட்போர் யாருமில்லையா என்று மக்கள் சபித்தபடி சென்றுகொண்டு இருந்தபோது, ஐந்து பொலிஸ் அதிகாரிகள் அந்த இடத்திற்கு விரைந்தார்கள். சீருடையில் இருந்த அந்த அதிகாரிகளை ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக முழம் தாளிட வைத்தார் அமரே. குண்டுத் துளைக்காத முழு ஆடை அணிந்தபடி எப்போதும் ரீ56 துப்பாக்கியைத் தோளில் ஏந்திய வண்ணம் பகிரங்கமாய் அலைவார் அமரே. இந்தியாவின் சந்தனக் கடத்தல் மன்னன் வீரப்பன் நடமாடுவதுபோல இந்தக் காட்சி இருக்குமாம்.

## அமரேயின் சிறைச்சாலை முற்றுகை

அமரே சிறைக்குச் செல்வதும் விடுதலையாவதும் பெரிய விடயம் அல்ல. சிறையில் இருந்தால் பரவாயில்லை என்று யோசித்தால் சிறைக்குப் போவார். சிறைக்குப் போனாலும் தாராளமான உபசரிப்புகள் அவருக்குக் கிடைத்தன. 2002 ஆம் ஆண்டு அமரே தங்கல்ல சிறையில் இருந்தபோது நடத்திய ஒரு போராட்டத்தின் மூலம் உலகளவில் பிரபலமானார். சிறைச்சாலை ஆயுதக் களஞ்சியத்தைக் கைப்பற்றிய அமரேவும் அவருடைய சக சிறைவாசிகளும் ஆயுதங்களை கையிலேந்தியபடி திரிந்தனர். அத்தனை பேர் கையிலும் ஆயுதங்கள் இருந்ததால் எந்த நேரத்திலும் சிறைச்சாலைக்குள் ஒரு கோரத் தாண்டவம் நிகழலாம் என்று எதிர்வு கூறப்பட்டது. ஊடகங்கள் எல்லாம் தங்கல்ல சிறைச்சாலையில் மையம் கொள்ளத் தொடங்கியிருந்தன. முன்னெச்சரிக்கையாக விசேட அதிரடிப் படையும் வரவழைக்கப்பட்டிருந்தது. அப்போது ரணில் பிரதமராக இருந்தார். மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

உள்விவகார அமைச்சர் ஜோண் அமரத்துங்கவுக்கு நிலைமையின் விபரீதம் புரிந்திருந்தது. யாரை அழைத்துக்கொண்டு போனால் நிலைமையைச் சாந்தப்படுத்தலாம் என்று ஜோண் அமரத்துங்கவுக்கு தெரிந்திருந்தது. எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவை அழைத்துக்கொண்டு சிறைச்சாலைக்கு விரைந்தார் ஜோண் அமரத்துங்க. சிறைச்சாலை மதிலுக்கு வெளியே இருந்தவாறே அமரே, அமரே. நான் மகிந்த ராஜபக்ஷ வந்திருக்கிறேன். பயப்படாமல் வெளியே வா என்றாராம் மகிந்த ராஜபக்ஷ. அத்தோடு அமரேவின் அந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் நிறைவு பெற்றது. பழையபடி அமரே தன்னுடைய சிறைக்கூடத்துக்குப் போனார். மகிந்த ராஜபக்ஷவின் ஒற்றை வாக்கியம் அமரேவை மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பாக்கியது. தென்மாகாணத்தில் இருந்த பல பாதாள உலகக் குழுக்களுக்கு செய்வதற்கு ஒன்றும் இருக்கவில்லை. அமரேவை எதிர்த்துகொண்டு நின்றுபிடிக்க முடியாததால் நேவிருவான் போன்ற பிரபல தாதாக்கள் தலைமறைவானார்கள்.

அதிகாரம் குறைந்த யூனியத் தாதாக்கள் அமரேவுக்கு சலாம் போட்டு ஒதுங்கி நின்றார்கள். அமரே மேல் அப்போது அதிக வம்புகளும் வழக்குகளும் குவிந்திருந்தன.

ஆனால் அமரே எதையுமே கண்டுகொள்ளவில்லை. எதுவுமே வேலைக்காகாததால் கண்ட இடத்தில் கைதுசெய்யுமாறு அமரேவுக்கு எதிராக தங்கல்ல மேல் நீதிமன்றம் திறந்த பிடியாணையை விதித்தது. அவரை கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு யாருமே முயற்சி செய்யவில்லை. அந்த அளவுக்கு அமரேவின் அரசியல் பலம் இருந்தது.

## திறந்த பிடியாணை

திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட அமரே பொலிஸ் நிலையம் சென்று பொறுப்பு அதிகாரியோடு சாகசமாய் உரையாடி விட்டு வருவாராம். இப்படிப்பட்ட ஒருவரை யார் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துவது. இப்போது இதை எல்லாம் கற்பனை செய்யவே அச்சமாக இருக்கிறது. அமரேவின் அட்டகாசங்கள் இப்படி தறிகெட்டு சென்றுகொண்டு இருந்த போதுதான் அமரேவின் வாழ்வை மொத்தமாக மாற்றிப்போட்ட அந்தச் சம்பவம் நடந்தது. நாமலின் நீலப்படையெனப்படும் நில்பலகாயவில் எல்லாமாக இருந்தார் யூலம்பிட்டிய அமரே. இந்த நிலையில் ஜே.வீ.பியின் பத்திரிகையான "லங்கா" யூலம்பிட்டிய அமரேவை போட்டு தாறுமாறாகத் தாக்கத் தொடங்கியது. உச்சகட்டமாக நதமுல்லன வேட்டை நாயை கட்டிப் போடு என்று கட்டுரை எழுதியது "லங்கா பத்திரிகை" இதனால் மிகுந்த ஆத்திரம் கொண்டார் அமரே. 2012 ஆம் ஆண்டு யூன் 15ஆம் திகதி ஹம்பாந்தோட்ட மாவட்டத்தில் கடடிவற்ர கட்டுவான என்ற இடத்தில் லியனகே ரஞ்சித் என்பவரது வீட்டில் ஜே.வீ.பியின் ஒரு சிறிய கூட்டம் நடந்து கொண்டு இருந்தது. அது ஒரு 50 - 60 பேர் கூடியிருந்த ஒரு கூட்டம். இன்றைய சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேடையில் இருந்தார். அப்போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. அமரேயுடன் நான்கு பேர் மோட்டார் சைக்கிள்களில் தடாலடியாய் வந்து இறங்கினார்கள். நான் நதமுல்லன வேட்டையனாய் வந்திருக்கிறேன். யார் இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்தவன். முடிந்தால் வா மோதிப் பார்ப்போம் என்று குரைத்தபடி கண்டபடி சுடத்தொடங்கினாராம் அமரே. அரசியல் தொடர்புகள் அற்ற இரண்டு பேர் அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்து போனார்கள்.

பயங்கரவாதத்தை ஒளித்து விட்டதாய் மார்பு தட்டிக் கொண்ட தேசத்தில் யூலம்பிட்டிய அமரே ரீ56 துப்பாக்கிகளுடன் வந்து ஜனாதிபதியின் சொந்த மாவட்டத்தில் இந்த குரூரத்தை நிகழ்த்தி விட்டு போனார்.

இரவு 7 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்தது. 9 மணி அளவில் தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளராயிருந்த லக்ஸ்மன் குலுகல்ல, இந்தப் படுகொலைகளை ஜே.வீ.பியின் கோஸ்டிச் சண்டை என்று கூறினார்.

இதனால் மிகுந்த ஆத்திரமடைந்த ஜே.வீ.பி, லக்ஸ்மன் குலுகல்லவை பாராளுமன்றத்திலும் பொது மேடையிலும் வறுத்தெடுக்கத் தொடங்கியது. அமரேவை கைதுசெய்யுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்து மிகப்பெரிய எதிர்ப்புப் பேரணியை நடத்தியது.

திரண தொலைக்காட்சியில் வாதப்பிட்டிய அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அநுரகுமார திஸாநாயக்கா லக்ஸ்மன் குலுகல்ல மீது குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டு போனார், அப்போது நிகழ்ச்சிக்குத் தொலைபேசி வழியாகத் தொடர்புகொண்டு பேசிய லக்ஸ்மன் குலுகல்ல அநுரகுமார திஸாநாயக்காவின் பொய்களுக்குத்தான் அஞ்சப்போவதில்லை என்றார். அவ்வளவுதான் அநுரகுமார திஸாநாயக்கா லக்ஸ்மன் குலுகல்லவை உடும்புப்பிடியாய்ப் பிடித்து உலுக்கி எடுக்க தொடங்கினார். அப்போது ஜே.வீ.பியின் தலைவராக சோமவான்ச அமரசிங்க இருந்தார். அவருடைய வழிகாட்டலில் கட்டுவன படுகொலைகளுக்கு எதிராக நாடுமுழுக்கச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. மிகுந்த வீரியமாய் எதிர்த்து நின்றது ஜே.வீ.பி.

ஒருகட்டத்தில் அமரேவை இன்னமும் பாதுகாப்பது பெரும் அவமானமாகிப் போனது அரசுக்கு. வாழை மரத்தை கொத்திய மரங்கொத்தி போலாகிப் போனார் அமரே. வெள்ளை நிற சேட், வெள்ளை நிற காற்சட்டை, வெள்ளை நிற சப்பாத்து அணிந்து தங்கல்ல நீதிமன்றத்தில் சரணடைந்தார் அமரே. வலஸ்முல்ல நீதிவான் நீதிமன்றத்தில் நடத்த இனங்காணல் அணிவகுப்பில் அமரே கொலைக் குற்றவாளி என மூன்று கண்கண்ட சாட்சிகளால் யூன் 22, 2012 இனங்காணப்பட்டார். 7 ஆண்டுகள் நடந்த வழக்கு விசாரணை முடிவில்தான் 2019இல் தங்கல்ல மேல் நீதிமன்ற நீதிபதி R.S.S.Sapuwidha, அமரேவுக்கு மரண தண்டனை விதித்தார். இந்த தண்டனையைக் கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

உச்ச நீதிமன்ற நீதிபதி ஜனாதிபதியினால் தீர்மானிக்கப்படும் திகதியில் அமரே தூக்கிலிடப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என தீர்ப்பு அளித்துள்ளார். மரண தண்டனை நிறைவேற்றப்படும் வரைக்கும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளார். அரசியல்வாதிகளால் போசிக்கப்பட்ட அமரேவின் அத்தியாயம் 2025 ஐப்பசி 07 உடன் நிறைவுக்கு வந்தது.

அமரே போன்றோரை தம் அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தியவர்கள் இன்று வாயே திறக்கமாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரை அமரே பாவித்து முடித்து வீசப்பட்ட ஒரு ரிசுப் பேப்பர்.

**(Hisham.M.Vlog என்னும் வலையொளிப் பதிவிலிருந்தும் https://asianmirror.lk/news, https://www.adaderana.lk/news, https://www.dailymirror.lk, https://www.newswire.lk, https://english.gossiplankanews.com பதிவிலிருந்தும் தொகுக்கப்பட்டது)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 மனைவிகள், 35 குழந்தைகள், 100 உதவியாளர்கள்



## ஆடம்பர ஆபிரிக்க மன்னர்

எசுவாத்தினி என்ற ஆபிரிக்க நாட்டின் மன்னர் ஒருவர், தன் 15 மனைவிகள், 30 குழந்தைகள் மற்றும் 100 உதவியாளர்களுடன் சில ஆண்டுகளுக்கு முன் அபுதாபி விமான நிலையத்தில் தடபுடலாக வந்திறங்கிய பழைய வீடியோ ஒன்று சமூக ஊடகங்களில் தற்போது மீண்டும் வைரலாகியுள்ளதோடு, பேசுபொருளாகவும் மாறியிருக்கிறது.

ஆபிரிக்காவின் கடைசி மன்னராட்சி நாடுதான், எசுவாத்தினி. தெற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள ஒரு சிறிய நாடு இது. முன்பு சுவாசிலாந்து என்ற பெயரில் அறியப்பட்ட இந்த நாட்டின் மக்களில் சுமார் 60% பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள். பசி மற்றும் வறுமையுடன் போராடுகிறார்கள். உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக எசுவாத்தினியும் அறியப்படுகிறது. எசுவாத்தினி நாட்டின் 1.3 மில்லியன் மக்கள் தொகையில் பெரும்பான்மையானோர் வறுமையில் வாழவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இன்னொரு துயரமாக, உலகிலேயே எச்.ஐ.வி பாதிப்பு விகிதம் மிக அதிகமாக உள்ள நாடுகளில் எசுவாத்தினியும் ஒன்றாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இப்படிப்பட்ட நாட்டின் மன்னராக, மஸ்வாதி என்பவர் இருக்கிறார். வறுமையான நாட்டின் மன்னர்தானே என இவரை நினைத்துவிடக் கூடாது. ஆடம்பரமான வாழ்க்கையை வாழும் இவர் மிகப் பெரிய அளவில் பணத்தைச் சேர்த்து வைத்திருக்கிறார். இவரது சொத்து மதிப்பு ஒரு பில்லியன் டொலருக்கும் மேல் என்று கூறப்படுகிறது. மன்னர் மஸ்வாதியின் நாட்டில் ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் - செப்டெம்பர் மாதத்தில் நடக்கும் திருவிழாவின்போது, அவர் ஒரு புது மனைவியைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். அந்த வகையில், இப்போது மன்னருக்கு 30 மனைவிகள் உள்ளனர். 35இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர்.

இந்த நிலையில், தற்போது வைரலாகியுள்ள வீடியோவில், மன்னர் மஸ்வாதியின் ஆடம்பர வாழ்க்கை முறையைப் பார்த்து பலரும் ஆச்சரியம், விமர்சனம் என்று பதிவிட்டு வருகின்றனர். 2022ஆம் வருடம், மன்னர் மஸ்வாதி அரச காரணங்களுக்காக அபுதாபி சென்றபோது எடுக்கப்பட்ட வீடியோ அது. தற்போது மீண்டும் வைரலாகி, கமெண்ட்கள், ஷேர்கள் பறக்கின்றன.

அந்த வீடியோவில் மன்னர் மஸ்வாதி, தன் 15 மனைவிகள் (ஆம், மீதி 15 மனைவிகளை அழைத்து வரவில்லை!), 30 குழந்தைகள், 100 அரச பணியாளர் கள் எனத் தனி விமானத்தில் அபுதாபி விமான நிலையத்தில் வந்து இறங்குகிறார். அந்தக் காட்சிகளில், அவர் விமான நிலையத்தையே சில மணி நேரம் ஸ்தம்பிக்க வைத்திருக்கிறார். ஆபிரிக்க பாரம்பர்ய ஆடை அணிந்திருக்கும் மன்னரை, விமான நிலையப் பணியாளர்கள் குனிந்து, சல்யூட் வைத்து பணிந்து வரவேற்கிறார்கள். மன்னரின் மனைவிகள், பாரம்பரிய ஆடைகள், அணிகலன்கள் என வரிசையாக வருகிறார்கள். அரச பணியாளர்கள், அரசரின் பெரிய குடும்பத்திற்கான லக்கேஜ்களை கையாள்கிறார்கள். இவர்களின் வருகையால், மூன்று விமான முனையங்கள் தற்காலிகமாக மூடப்படுகின்றன.

இந்த வீடியோ, அரச குடும்பத்தின் ஆடம்பர வாழ்க்கைமுறைகளுக்கும், அவரது நாட்டின் மக்கள் வறுமையில் வாடும் துயரமான உண்மைக்கும் இடையிலான பெரிய முரண்பாட்டை அம்பலப்படுத்தியது. நாட்டு மக்கள் வறுமையில் வாடும்போது, மன்னர் இப்படி ஆடம்பரமாக உலா வரலாமா? என்று சமூக ஊடகங்களில் மக்கள் தங்கள் குமுறலை வெளிப்படுத்தி வருகின்றனர்.

## ஆச்சி அறிவுரை



# பெற்றோர்களை இல்லங்களில் விடும் பிள்ளைகள் உருப்படமாட்டார்கள் பேராண்டி...

07.10.2025 வலம்புரிப் பத்திரிகையில, கைதடி அரச முதியோர் இல்லத்தின்ர ஆத்ம சாந்திப் பிரார்த்தனை விளம்பரத்தைப் பார்த்தன்.

எனக்கு மனசுக்கு ஒரு மாதிரியாப் போச்சுது பேராண்டி. ஓம், கைதடி முதியோர் இல்லத்தில வாழ்ந்து 01.10.2024 இல் இருந்து 30.09.2025 வரையான காலப்பகுதியிலை இயற்கை எய்திய முதியவர்களின்ர 38 பேரின்ர முகவரியோட அவையின்ர படமும் போட்டு, அவை எவ்வளவு காலம் கைதடி முதியோர் இல்லத்தில வாழ்ந்தவை எண்டுற விபரமும் போட்டிருந்துது.

அதைப் பார்க்க ஒருபக்கம் சந்தோசமா இருந்ததோட இன்னொரு பக்கம் கவலையாயும் இருந்துது.

அந்த உயிர்கள் எவ்வளவு கனவுகளோட தங்கட பிள்ளைகளைப் பெத்து வளர்த்திருக்குங்கள்.

பிள்ளையைப் பெத்தால் மட்டும் போதுமெண்டால், பிள்ளைகளை அனாதை இல்லங்களில விட்டிருக்குங்களே.

ஆனால் அதுகள் தங்கட பிள்ளைகளைக் கஷ்டப்பட்டு படிக்க வைச்சு நல்ல நிலைக்குக் கொண்டுவந்துவிட, அந்தப் பிள்ளைகள் தாய், தகப்பனைக் கொண்டு போய் முதியோர் இல்லங்களில விடுகுதுகளே.

இப்பிடி பத்திரிகைகளில விளம்பரம் போட்டால், தங்களுக்கு அவமானமாப் போடும் எண்டாவது தாய், தகப்பனை இல்லங்களில விடமாட்டினம் எண்டுற நோக்கத்திலும் இதை விளம்பரப்படுத்தியிருக்கலாம்.

பிள்ளைகளைப் பெத்து வளத்து அதுகளை ஆளாக்கிவிட கொஞ்சமும் இரக்கமில்லாமல் பெத்தவர்களை இப்பிடி இல்லங்களிலை விடுற ஆக்கள் ஒண்டை நினைக்கவேணும்.

தங்களுக்கும் பிள்ளைகள் இருக்கினம். இதே நிலை எங்களுக்கும் வரும் எண்டுறதுதான் அது.

கைதடி முதியோர் இல்ல நிர்வாகம் மிகச் சிறந்த சேவையைச் செய்து வருகுது. அதுக்கு அவர்களைப் பாராட்டியே ஆகவேணும் பேராண்டி.

ஆச்சி வருவா...

மாவை.நா.கஜேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : தர்ம யுத்தம்
பாடியவர்: மலேசியா வாசுதேவன்
இசை: இளையராஜா



ஒரு தங்கரதத்தில் பொன்மஞ்சள் நிலவு
ஒரு தங்கரதத்தில் பொன்மஞ்சள் நிலவு
என் தெய்வம் தந்த..........
என் தெய்வம் தந்த என் தங்கை

ஒரு தங்கரதத்தில் பொன்மஞ்சள் நிலவு
ஒரு தங்கரதத்தில் பொன்மஞ்சள் நிலவு

செம்மண்ணிலே தண்ணீரைப்போல் உண்டான சொந்தம் இது
சிந்தாமணி ஜோதியைப்போல் ஒன்றான பந்தம் இது
தங்கை அல்ல.....
தங்கை அல்ல தாயானவள்
கோடி பாடல் நான் பாட பொருளானாள்

ஒரு தங்க ரதத்தில் பொன்மஞ்சள் நிலவு
ஒரு தங்க ரதத்தில் பொன்மஞ்சள் நிலவு

கண்ணீரினால் நீராட்டினால் என் ஆசை தீராதம்மா
முன்னூறு நாள் தாலாட்டினால் என் பாசம் போகாதம்மா
என் ஆலயம் பொன் கோபுரம்
ஏழேழு ஜென்மங்கள் ஆனாலும் மாறாதம்மா

ஒரு தங்கரதத்தில் பொன்மஞ்சள் நிலவு
ஒரு தங்கரதத்தில் பொன்மஞ்சள் நிலவு

ராஜாவை நான் ராஜாத்திக்கு
துணையாக பார்ப்பேன் அம்மா
தேவர்களின் பல்லாக்கிலே ஊர்கோலம்
வைப்பேன் அம்மா
மணமங்கலம் திருக்குங்குமம் வாழ்க என்று
பல்லாண்டு நான் பாடுவேன்

ஒரு தங்கரதத்தில் பொன்மஞ்சள் நிலவு
ஒரு தங்கரதத்தில் பொன்மஞ்சள் நிலவு
என் தெய்வம் தந்த..........
என் தெய்வம் தந்த என் தங்கை

ஒரு தங்க ரதத்தில் பொன்மஞ்சள் நிலவு
ஒரு தங்க ரதத்தில் பொன்மஞ்சள் நிலவு

# 'அமைதிக்கான நோபல் பரிசு' வென்றெடுத்த வெனிசூலாவின் இரும்புப் பெண்மணி!

எப்போதும் எந்தச் சலனமும் இல்லாமல் வழங்கப்படும் அமைதிக்கான நோபல் பரிசு, இந்த முறை சிறிய சலசலப்புக்கு நடுவே வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சலசலப்பை உண்டாக்கியவர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்! இரண்டாவது முறையாக ஜனாதிபதி அரியணை ஏறியது முதலே, 'எப்படியாவது அமைதிக்கான நோபல் பரிசை வென்றுவிட வேண்டும்' எனத் துடித்தார் ட்ரம்ப். முதலில் தனது சகாக்களை ஏவி, "அமைதிக்கான நோபல் பரிசுக்குத் தகுதியானவர் ட்ரம்ப்தான்" எனக் கூச்சலிட வைத்தார். பின்னர், "அமைதிக்கான நோபல் பரிசு எனக்கு வேண்டும்" என்று வெட்கத்தைவிட்டு அவரே சத்தம் போட்டுக் கேட்டுப் பார்த்தார்.

ஆனால், இது எதையுமே கண்டுகொள்ளாத நோபல் பரிசு கமிட்டி, தகுதியான ஒருவருக்கு அந்தப் பரிசை வழங்கிச் சிறப்பித்திருக்கிறது! வெனிசுலா நாட்டைச் சேர்ந்த மரியா கொரினா மச்சாடோவுக்குத் தான் இந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்திருக்கிறது. யார் இவர். அப்படி என்ன செய்தார்?

## ஓங்கிய சர்வாதிகாரம். ஒழிக்கப்பட்ட ஜனநாயகம். மக்களைத் திரட்டிய மரியா!

எண்ணெய் வளம் மிகுந்த தென்னமெரிக்க நாடு வெனிசுலா. நீண்டகாலமாக ஜனநாயக நாடாக இருந்துவந்த வெனிசுலா, தன்னகத்தே இருக்கும் எண்ணெய் வளத்தைப் பயன்படுத்தி, 1970 களில் உலகின் பணக்கார நாடுகளுள் ஒன்றாக மாறியது. ஆண்டுகள் செல்லச்செல்ல நாட்டில் ஊழல் அதிகரித்தது. இதனால் 90களின் இறுதியில், பெரும் பொருளாதார நெருக்கடி உண்டானது. இந்தச் சூழலில், இராணுவப் புரட்சியை உண்டாக்கி ஆட்சியைக் கைப்பற்ற முற்பட்டார் இராணுவத் தளபதி ஹியூகோ சாவேஸ். ஆனால், அது தோல்வியில் முடிந்தது.

இருந்தும், ஊழல்வாதிகளிடமிருந்து நாட்டை மீட்க முயன்ற ஹியூகோவுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரித்தது. இந்தச் செல்வாக்கைப் பயன்படுத்தி 1999ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற ஹியூகோ, அந்த நாட்டின் ஜனாதிபதியானார். ஆட்சிக்கு வந்த வுடன் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்தி, ஜனாதிபதிக்கான அதிகாரத்தைப் பல மடங்காக்கினார். மெல்லமெல்ல உச்ச நீதிமன்றத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தொடங்கினார்.

2013 ஆம் ஆண்டு, தனது உயிர் பிரியும் வரை தானே ஜனாதிபதியாக இருக்கும்படி பார்த்துக் கொண்டார் ஹியூகோ. அவருக்குப் பிறகு, அவரின் அரசியல் வாரிசான நிக்கோலஸ் மதுரோ ஜனாதிபதி பதவியை எடுத்துக்கொண்டார். ஹியூகோ போட்டுக் கொடுத்த அதீத அதிகாரத்துவம் நிறைந்த பாதையில் பயணித்து, இன்று வெனிசுலாவை முழுமையான சர்வாதிகார நாடாக மாற்றியிருக்கிறார் மதுரோ.

2016 இல் நடந்த தேர்தலில், எதிர்க்கட்சிகள் வெற்றிபெற்றன. ஆனால், தனது கட்டுப்பாட்டிலுள்ள உச்ச நீதிமன்றத்தைக் கொண்டு,பாராளுமன்றத்தின் அதிகாரங்களைப் பறித்தார் மதுரோ. மதுரோவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகளையும், மக்களையும் ஓரணியில் திரட்டினார் மரியா கொரினா மச்சாடோ. மக்களின் ஜனநாயக உரிமைகளை மீட்டெடுக்கப் போராடிய மரியாவுக்கு, இன்று அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்திருக்கிறது.

## யார் இந்த மரியா?

ஒக்டோபர் 7, 1967 இல் வெனிசுலா நாட்டில் பிறந்த மரியா, பொறியியல், நிதித்துறைகளில் பட்டம் பெற்றவர். ஆரம்பத்தில் வணிகத்துறையில் பணியாற்றிய மரியா, பின்னர் சமூக சேவை செய்வதில் ஆர்வம் காட்டினார். "வெனிசுலாவின் சாலையோரங்களில் வீடுகளின்றித் தவிக்கும் குழந்தைகளுக்கு உணவு, கல்வி, அடிப்படை வாழ்வாதாரங்களை ஏற்படுத்தித் தர வேண்டும்" என்ற எண்ணம் அவர் மனதில் உதித்தது. இதற்காக ஓர் அறக்கட்டளையை உருவாக்கினார். அதன் மூலம் பல குழந்தைகள் பயன்பெற்றன. வெனிசுலாவில் தேர்தல் முறைகேடுகள் நடைபெறாமல் தடுக்க, 'சுமாடே' என்ற அமைப்பு ஒன்றை 2002 இல் தொடங்கினார் மரியா.

இந்த அமைப்பின் மூலம் நியாயமான, சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்யப் பாடுபட்டார். இதன் காரணமாக, பல அடக்கு முறைகளுக்கு உள்ளானார். இந்த அடக்குமுறைகள் மரியாவை அரசியலை நோக்கி நகர்த்தின. 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வென்று பாராளுமன்ற உறுப்பினரானார் மரியா. தொடர்ந்து அவர் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாததால், 2014 ஆம் ஆண்டு அவரைப் பதவியிலிருந்து நீக்கினார் மதுரோ. இதையடுத்து 'Vente Venezuela' என்ற புதிய கட்சி ஒன்றைத் தொடங்கினார் மரியா.

## மதுரோவின் சர்வாதிகாரம். மரியாவின் போராட்டம்!

தொடர்ந்து மதுரோவின் சர்வாதிகாரத்துக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டு, மக்கள் செல்வாக்கைப் பெற்றார் மரியா. எதிர்க்கட்சிகளை ஓரணியில் ஒருங்கிணைத்தார். இருந்தும், மோசடி செய்து 2018 தேர்தலிலும் தானே வெற்றிபெற்றதாக அறிவித்துக்கொண்டார் மதுரோ. 2024 தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கினார் மரியா. தேர்தல் ஆணையத்தைக் கொண்டு, அவரைப் போட்டியிடவிடாமல் செய்தார் மதுரோ. எதிர்க்கட்சிகளின் வேட்பாளரான எட்முண்டோவை ஆதரித்தார் மரியா. எதிர்க்கட்சிகள் பெரும்பான்மையோடு வெற்றிபெற்றன. ஆனால், வாக்குகளை மாற்றி, முறைகேடுகள் செய்து தானே வெற்றிபெற்றதாக அறிவித்துக்கொண்டார் மதுரோ.

மதுரோவுக்கு எதிராகப் புரட்சியை உண்டாக்கும் வேலையில் இறங்கியதால், மரியாவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது. இதனால், கடந்த சில பல மாதங்களாகத் தலைமறைவாக இருந்து, நாட்டில் ஜனநாயகத்தை மீட்டெடுக்கச் சில முயற்சிகளை மேற்கொண்டுவந்தார் மரியா.

இந்தச் சூழலில்தான், மரியாவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெனிசுலாவில் முழுமையாகச் சர்வாதிகாரம் ஒழிக்கப்படவில்லை என்றாலும், ஜனநாயக உரிமையை மீட்டெடுக்க வேண்டும்' என்ற எண்ணத்தை ஆழமாக மக்கள் மனதில் ஏற்படுத்தியிருக்கிறார் மரியா.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீடுகளை நோக்கிப் படையெடுக்கும் ஆபிரிக்க நத்தைகள்...





## இதோ இருக்கிறது தீர்வு!

மழைக்காலம் வந்துவிட்டாலே, மரவட்டை, நத்தை போன்ற உயிரினங்களின் வருகை அதிகரித்துவிடும். அவை மிதிபடுவதும், இறப்பதும் வாடிக்கையாக இருந்து வருவது மக்களுக்கு ஓர் அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது. அதிலும், ஆபிரிக்க நத்தைகளின் வருகைக்குப் பிறகு வீடு, விவசாய நிலங்கள், பொது இடங்கள் என்று எங்கு பார்த்தாலும் புற்றீசல்கள் போல், இந்த நத்தைகளைக் காணமுடிகிறது.

தற்போது நகரப் பகுதிகளில் உள்ள வீடுகள் அமைந்திருக்கும் பகுதிகளிலும் இவை வலம் வருகின்றன. பல்வேறு பகுதிகளில், குறிப்பாக நீர்நிலைகள் மற்றும் ஈரப்பதம் நிறைந்த நிலப்பரப்புகளில் இந்த ஆபிரிக்க வகை நத்தைகள் அதிகளவு பரவிக் காணப்படுகின்றன.

சர்வதேச இயற்கை வளப் பாதுகாப்பு கூட்டமைப்பு (IUCN) அறிக்கையின்படி, 100 ஆக்கிரமிப்பு இனங்களில் மிகவும் மோசமான சூழலியல், பொருளாதார, சமூகச் சீர்கேடுகளை உருவாக்கும் உயிரினங்கள் பட்டியலில், ஒரு வகையான ஆபிரிக்க இராட்சச நத்தை (African Giant Snail) இரண்டாவது இடத்தில் உள்ளது.

**நத்தைகளின் பூர்வீகம்!**

இந்த நத்தை இனத்தின் பூர்வீகம் கிழக்கு ஆபிரிக்க நாடுகளான எத்தியோப்பியா, கென்யா மற்றும் தான்சானியா. பல்வேறு கால கட்டங்களில், இவை செல்லப் பிராணிகளாகவும், உணவு மற்றும் வர்த்தகப் போக்குவரத்தின் போது வாகனங்கள் மூலமாகவும் உலகின் பல பகுதிகளுக்குப் பரவின.

அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் பல நாடுகள்கூட, இந்த ஆபிரிக்க நத்தை இனத்தை அழிக்கமுடியாமல் போராடிக் கொண்டுதான் இருக்கின்றன. அமெரிக்காவின் ஃப்ளோரிடா மாகாணத்தின் பல பகுதிகளில், வெளிநாடுகளிலிருந்து வரும் சரக்கு வாகனங்கள் மூலம் இது பரவாமல் தடுப்பதற்காக, இன்றளவும் மோப்ப நாய்கள் பயன்படுத்தப் படுகின்றன. அமெரிக்கா, நத்தைகளுக்கு எதிராக இப்போதும் போராடிக் கொண்டுதான் இருக்கிறது"

**உயிரியல் பண்புகள்!**

சிவப்பு, பழுப்பு நிறத்தில் நீண்ட கோடுகள் உடைய, இரவில் வருகை புரியும் இந்த நத்தை, 20 முதல் 30 சென்ரி மீற்றர் வரை வளரக்கூடியது. விவசாய நிலங்கள், இயற்கை வனப்பகுதிகள், ஈர நிலங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள வீடுகளில், இவை அதிகளவு காணப்படும்.

**என்ன தீர்வு?**

உலகளவில் ஆபிரிக்க நத்தைகளைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த ஒரே தீர்வு என்பது இதுவரை இல்லை.

**இயற்கை முறையில் தீர்வு... இருக்கு!**

"சாதாரணமாகவே நத்தைகளைப் பார்த்தால் நமக்கு ஒரு விதமான அருவருப்பு தோன்றும். வீடுகளுக்கு வருகிறது என்றால் ஒருவித ஒவ்வாமை நம்மை தொற்றும். நத்தைகளின் மீது கல் உப்பை போட்டாலே அவை இறந்து விடும். ஆனால், வீட்டை நோக்கி வரும் ஒவ்வொரு நத்தையின் மீதும் இப்படி, கல் உப்பைப் போட்டுக் கொல்லமுடியாது.

நத்தைகளைக் கட்டுப்படுத்த, முட்டைகோஸ் இலை மற்றும் மடல்களைப் பிரித்து வீட்டின் அருகே ஓரிடத்தில் கொட்டி, அதன் மீது சணல் சாக்குப்போட்டு மூடி வைத்துவிட வேண்டும். மறுநாள் சாக்கை விலக்கிப் பார்த்தால் நிறைய நத்தைகள் ஒன்று கூடியிருக்கும். 10 லீற்றர் தண்ணீருக்கு 3 கிலோ கல் உப்புக் கலந்து நன்கு கலக்கி, இந்தக் கரைசலை நத்தைகள் மேல் தெளித்தால், அவை இறந்துவிடும். பிறகு, முட்டைகோஸ் இலைகள் மற்றும் இறந்த நத்தைகளை அப்புறப்படுத்தலாம். முட்டைகோஸ் இலைகளை நத்தைகள் ஏன் விரும்புகின்றன என்று தெரியவில்லை. இந்த முறையை விவசாய நிலங்களில் பயன்படுத்தி பார்த்ததில் நல்ல பலன் கிடைத்திருக்கிறது."

# தெளிவே என் சிந்தனையுள்... 32

நானும் எனது நண்பரும் ஒரு மரத்தின் கீழ்ப் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ஊரில் உள்ள கடவுள் இல்லை என்று வாதிடும் நாத்திகன் ஒருவர் அவ்விடத்திற்கு வந்தார்.

வந்தவர், "கடவுள் கடவுள் என்று எந்த நேரமும் தியானித்துக் கொண்டிருக்கிறீர்களே ஒருநாளாவது நீங்கள் கடவுளைக் கண்டீர்களா?" என்று பேச்சுக் கொடுத்தார்.

அதற்குப் பதில் சொல்ல முற்பட்டான் எனது நண்பன். நான் சைகையால் அவனைப் பேசாது தடுத்துவிட்டேன்.

அவர் கடவுள் இல்லை என்பதை நிரூபிப்பதற்கு பல உதாரணங்களைக் காட்டிப் பேசிக் கொண்டே இருந்தார்.

திடீரென பலமான காற்று அடிக்கவே மரத்தின் பெரிய கிளை ஒன்று முறிந்து அவரில் விழுவதாய் வரும்போது என் நண்பன் அவரின் கைப்பிடித்து இழுத்து விட்டான்.

அவர் விலகியதும் அவர் நின்ற இடத்தில் அந்தக் கிளை வீழ்ந்தது. அவர் பயத்தில் திகைத்து நின்றார்.

அப்போது நான் பேசத் தொடங்கினேன். கடவுள் இல்லை என்கிறீர்களே! இப்போது உங்கள் உயிரைக் காப்பாற்றினானே. இவன் தான் கடவுள்.

கடவுள் என்ற சக்தி மனித வடிவிலிலேயே வெளிப்படும் என்றேன்.

அவர் மௌனமாக நான் கூறியதை ஆமோதித்து, இருகரம் கூப்பி வணங்கிப் புறப்பட்டார்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ். கோட்டை



73

## செங்கை ஆழியான்

மண்டைதீவுக் கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருந்த கடற்கப்பல்கள் பீரங்கிகளைக் கக்க, விமானங்கள் குண்டுகளைப் பொழிய இராணுவம் மண்டைதீவிற்குள் பிரவேசித்தது. மண்டைதீவு மக்கள் பொறிக்குள் அகப்பட்ட நிலையினராயினர். பண்ணைத்தாம்போதியூடாகவோ, வள்ளங்கள் ஊடாக குருநகர், பாசையூருக்கோ செல்ல முடியாதவாறு வியூகத்தினுள் அகப்பட்டுக்கொண்டனர். சின்னத் தீவிற்கு அப்பால் நின்றிருந்த கடற்கப்பல் உமிழ்ந்துகொண்டிருந்த பீரங்கிகள், யாழ்ப்பாணப்பரவை கடலை வள்ளங்களால் கடக்க இடமளிக்கவில்லை. கோட்டைப்பக்கமிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பண்ணைத்தாம்போதியில் கால் வைக்கவிடவில்லை.

மண்டைதீவைச்சேர்ந்த 1100 குடும்பங்களும் அல்லற்பட்டன. ஒருவிதமாக அல்லைப்பிட்டி பரவைக் கடலைக்கடந்து குழந்தைகள், பிள்ளைகள், பெண்கள், ஆண்கள் எனத் துணிந்தவர்கள் வேலணைத்தீவிற்குள் புகுந்தனர். மண்கும்பானில் அடைக்கலம் புகுந்தனர் நோயாளர், வயோதிபர். இடம்பெயர விரும்பாதவர்கள், சொத்து, சுகம் என அவற்றினைவிட்டு வெளியேற விரும்பாதவர்கள் மண்டைதீவில் தங்கி, இராணுவத்தினரின் துப்பாக்கிகளுக்கு இரையாகினர். மண்டை தீவிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள், மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, பாபா பள்ளிவாசல், பெரிய பள்ளிவாசல், சாட்டி மாதா கோயில் என்பனவற்றில் அகதிகளாகத்தஞ்சம் புகுந்தனர்.

மண்டைதீவுக்குள் பிரவேசித்த இராணுவத்தினர் மண்டைதீவுப் பிள்ளையார் கோயிலில் தஞ்சம் புகுந்திருந்த மக்களில் 6 ஆயிரம் மக்களை வரிசையாக நிற்க வைத்தனர். ஏசினர். சிலரைத் தாக்கினர். 50 ஆண்களைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். மண்டைதீவிலுள்ள பல வீடுகள் தகர்க்கப்பட்டன. குடிசைகள் அனைத்தும் எரியூட்டப்பட்டன. வீடுகளிலிருந்து பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. வாகனங்கள் எரிக்கப்பட்டன. மோட்டார் சயிக்கில்கள் களவாடப்பட்டன. பங்கர்களுக்குள் இருந்த பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மண்டைதீவில் ஏறத்தாழ 50 பொது மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அல்லைப் பிட்டிப் பகுதியில் 20 பேர் வரையில் கொல்லப்பட்டனர். மண்டைதீவின் தெற்குப்பகுதி வீடுகள் அதிகம் எரிக்கப்பட்டன வேலிகள், மதில்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டன. எரிக்கப்பட்டன. அல்லைப்பிட்டி மகா வித்தியாலயப் பிரதேசம் புல்டோசரினால் இடித்துத் தகர்க்கப்பட்டது. மண்டைதீவுக் கத்தோலிக்க தேவாலயப் பகுதி, அதனைச் சுற்றியிருந்த வீடுகள் கட்டிடங்கள் என்பன விமானக்குண்டு வீச்சினால் நிர்மூலமாக்கப்பட்டன.(தொடரும்)

# பேய்த் திட்டம்




166

## கடற்புறா

பலவர்மன் அந்த விஷமத்துக்குப் பதிலாக விஷத்தைக் கக்கினான். "வணிகரே, மூளையை அதிகமாக உபயோகப்படுத்த வேண்டாம். உபயோகப்படுத்தி உமக்குச் சம்பந்தமில்லாத விடயத்தில் தலையிடாதிரும். அப்பொழுதுதான் உமது மூளையும் அதை உள்ளடக்கியிருக்கும் தலையும் மிஞ்சும். இல்லையேல்..." என்று வாசகத்தை முடிக்காமலே சென்றுவிட்டான் அக்ஷய முனைக் கோட்டையின் தலைவன்.

அவன் பேச்சை எண்ணி எண்ணிக் குமுறினான் சேந்தன். "எத்தனை திமிர் இந்தக் கோட்டைத் தலைவனுக்கு?" என்று உள்ளுக்குள்ளேயே கருவிக் கொண்டு. அவனைப் பழி வாங்கும் நோக்கத்துடன் இளையபல்லவன் கூறுவதை விடத் துரிதமாகவே பலவர்மன் பொக்கிஷத்தை மக்களுக்கு அள்ளி வாரிவிடத் தொடங்கினான். ஆனால் அந்தப் பணத்தையும் லட்சியம் செய்யும் நிலையில் மக்கள் இல்லை. மூன்று நாள் கழித்து மஞ்சளழகியின் மறைவைக் கூட மறந்துவிடும் நிலை அந்த நகரத்தில் ஏற்பட்டது.

மூன்றாம் நாள் இரவிலிருந்தே பகிட்பாரிஸான் காட்டுப் பகுதியில் தொலைதூரத்திலிருந்து பூர்வகுடிகளின் பெரும் டமார ஓசைகள் கேட்கத் தொடங்கின. 'காட்டுப் புறத்தில் எங்கோ தூரத்தில் தீப வெளிச்சமும், அடிக்கடி தெரியத் தொடங்கியது. சிலசமயம் நள்ளிரவையொட்டி ஓரிரு தீபங்கள் கோட்டை மதிலிலிருந்து சற்றுத் தள்ளி இருந்த காட்டு ஓரங்களிலும் தெரியத்தொடங்கின.

இதையெல்லாம் கவனித்த நகர மக்கள் பெரும் கிலியடைந்தனர். காட்டுப் பகுதியில் தூரத்தே கேட்ட டமார ஒலிகளும், அடிக்கடி சுடர்விட்ட தீப ஒளிகளும் பதக்குகளின் தாக்குதலுக்குப் பூர்வாங்கமென்பதை நகர மக்கள் அறிந்தேயிருந்தனர். அடுத்த இரண்டு நாட்களில் அமாவாசையும் நெருங்க இருந்ததால், பூர்வ குடிகள் கண்டிப்பாய் நகரத்தைத் தாக்கப் போகிறார்கள் என்ற உணர்வு ஏற்படவே, நகர மக்கள் பீதியும் கொதிப்பும் அடைந்தனர். முன்பெல்லாம் இல்லாத தைரியமும் தங்களுக்கு இளையபல்லவனால் ஏற்பட்டும், இளைய பல்லவன் முயற்சியால் ஆயுதப் பயிற்சி நன்றாகத் தங்களுக்கு அளிக்கப்பட்டும் ஏன் தங்களைப் பாதுகாப்புக்கு படைத் தலைவனோ, அமீரோ அணி வகுத்து நிறுத்தவில்லையென்பது அவர்களுக்குப் புரியாததால் பெரும் கொதிப்படைந்தனர். கொதிப்படைந்த மக்களின் தலைவர் இருவர் அதுபற்றி அமீரை விசாரித்தனர். அமீரிடமிருந்து சரியான பதில் ஏதும் வரவில்லை. "உங்களை உபயோகப்படுத்தும் சமயம் படைத்தலைவருக்குத் தெரியும்" என்று திட்டமாகச் சொல்லி மேலே ஏதும் பேச மறுத்துவிட்டான் அமீர்.

அவனிடம் எதையும் அறியமுடியாத நகர மக்கள் விளக்கம் பெற இளையபல்லவனை அணுகினார்கள். இரு தலைவர்களும் சென்றபோது கையில் மதுக்குப்பியுடன் காட்சியளித்தான் இளையபல் லவன். அவர்களை பார்த்ததும் பஞ்சணையில் எழுந்து உட்கார்ந்து, "தெரியும் நீங்கள் வந்திருக்கும் காரியம். இதைப் பிடுங்கிக் கொண்டு போகப் போகிறீர்கள்" என்று மதுக் குப்பியைக் காட்டினான்.

அவனிருந்த நிலை அவர்களுக்கு வெறுப்பைத் தந்தது. இத்தகைய குடிகாரனை நம்பி, பூர்வகுடிகளையும் விரோதித்துக்கொண்டு விட்டோமே என்று தங்களையே அவர்கள் நொந்து கொண்டார்கள். இருப்பினும் தலைவரில் ஒருவன் "படைத் தலைவரே!" என்று தொடங்கினான். "படை ஏது? தலைவர் ஏது?" வெறிச்சிரிப்பு அறையை ஊடுருவியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



ஒரு நாள் பள்ளியிலிருந்து வந்த தோமஸ் அல்வா எடிசன் கையில் ஒரு கவரில் உள்ள கடிதத்தை தன் அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் எனத் தன் ஆசிரியர் கூறியதாகச் சொல்லிக் கொடுத்தான்.

அந்த கடிதத்தை அந்த தாய் கண்ணீரோடு சத்தமாக தன் மகன் கேட்கும் படி இப்படிப் படித்தாள்

"உங்கள் மகனின் அறிவுத்திறமைக்கு முன் எங்கள் பள்ளி மிகவும் சிறியது. அவனுக்கு கற்பிக்க திறமையான ஆசிரியர்கள் எங்களிடமில்லை. அதனால் தயவு செய்து நீங்களே உங்கள் மகனுக்கு கற்பிப்பது நல்லது" என்று.

பல ஆண்டுகளுக்கு பிறகு எடிசனின் தாயாரும் காலமாகிவிட்டார்.

எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராகக் கண்டுபிடிப்பாளராகவும் ஆனார்.

இப்படி இருக்கையில் ஒருநாள் தனது வீட்டின் பழைய சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது அவர் தன் அம்மாவிடம் முன்பொருமுறை பள்ளியிலிருந்து கொண்டுவந்து கொடுத்த கடிதம் எதேச்சையாக கண்ணில் பட அதை எடுத்து படித்துப்பார்த்தார். அதில் இப்படி எழுதியிருந்தது.

"மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பள்ளிக்கு நீங்கள் அனுப்ப வேண்டாம்" என்று.

"இதைப்படித்த எடிசன் கதறி அழுதார்" பின் அவரது டைரியில் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

மூளை வளர்ச்சியற்ற தோமஸ் அல்வா எடிசன் தனது "தாயாலேயே" மாபெரும் கண்டுபிடிப்பாளனானான்" என்று.

தன்பிள்ளைகள் மீதான "உயர்வான எண்ணங்கள்" அவர்களை மிக உயரத்திற்கு கொண்டு செல்லும்..!

குழந்தைகள் மனதில் தன்னம்பிக்கையை விதைப்போம் நன்றி.!



## கவிதைக் கலசம்



## புது யுகம் ஒன்று

புத்தம் புது
பூமி வேண்டும்
யுத்தமில்லா
நாடு வேண்டும்
சத்தமில்லா
சமாதானம்
வேண்டும்
சரிநிகர் சமம்
கண்டிட வேண்டும்

சுமைகளில்லா புது
சுகங்கள் வேண்டும்
சுதந்திர யுகமொன்று
புலர்ந்திட வேண்டும்

சத்தியம் தர்மம்
நிலைத்திட வேண்டும்
சமாதானப் புறாக்கள்
பறந்திட வேண்டும்
நித்திய வாழ்வு
சிறக்க வேண்டும்
நிம்மதி ஒன்றே
நிலைக்க வேண்டும்

இல்லங்கள் சிறக்க
மங்கலம் வேண்டும்
இல்லாமை ஒழிந்திட
நல்லாக்கம் வேண்டும்
இந்நாடு எழில் பூக்க
இத்தனையும் வேண்டும்

**க.நாகேஸ்வரா**
**சண்டிலிப்பாய்**


**அன்பு வாசகர்களே!**

**உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...**

☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை

**ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.**

ஆசிரியர். வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126


## அன்னம் போல் ஆகிடுவோம்



தொடுதிரைத் தொலைபேசியை தட்டித் தடவ
மனம் மகிழும் காட்சிகள் பல பார்த்திடலாம்
இத்தொலைபேசி இளையோரைக் கவர்ந்திழுக்கும்
காதலர்களுக்கும் உறுதுணையாயிருக்கும்
அந்தரங்கங்களை மூடி மறைக்காமல் பகிர்ந்திடும்
ஆபாசப் படங்கள் பல தலைகாட்டி மறைந்திடும்
நிர்வாணக் கோலங்களை நீச்சலடிக்க வைக்கும்
பலருக்கும் பாலியலுணர்வைத் தூண்டிவிடும்
மாணவர்களின் கல்விக்கும் இடையூறாகிவிடும்
வெளிநாட்டினரின் உடைதடைக் கலாசாரம்
நம் நாட்டினருக்கும் தொற்றச் செய்யும்
இப்படியே பல கசப்பானவை இருந்தாலும்
நன்மை தரக்கூடியவையும் ஏராளமிருப்பதால்
நாமெல்லோரும் நீரகற்றி பாலுண்ணும்
அன்னம் போல தீயதை விலக்கி
நல்லதைப் பார்த்திடுவோம்.

# அறிவோம் ஆன்மிகம்



### பூஜையில் மணி ஒலிப்பது எதற்காக?

தேவர்களை வரவேற்கவும், தீயசக்திகளை வெளியேற்றவும் மணியோசை ஒலிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பூஜை மணியை மரியாதையுடனும் பக்தியுடனும் பீடத்தில் வைத்திருக்க வேண்டும். தரையில் - பூமியில் வைக்கக்கூடாது. பூஜை காலங்களில் ஆரம்பத்தின்போதும், தூபம், தீபம், நைவேத்தியம், தீபாராதனை போன்ற காலங்களிலும் மணி அடித்து வழிபட வேண்டும்.

### அன்பளிப்பாகக் கிடைத்த பழங்களை இறைவனுக்குப் படைக்கலாமா?

அன்பளிப்பாக வருவதால் ஒரு பொருள் தரம் தாழ்ந்தது என்பதில்லை. அன்பளிப்பு என்றாலே "இந்தப் பொருளை உன் உடைமை ஆக்குகிறேன்!" என்பதுதான். அப்படி உங்கள் உடைமையாகிவிட்ட பொருளை இறைவனுக்குச் சமர்ப்பிக்கலாம். அந்தப் பொருள் கடவுளுக்குப் படைக்கும் தகுதியோடு - பழுது இல்லாததாக இருக்கிறதா என்பதைப் பார்த்தால் போதும்.

### உடல்நலம் குன்றியவர்கள் குளிக்காமல் வழிபாடு செய்யலாமா?

உடல் நலம் குன்றியவர்களுக்கு நீரில் குளிப்பது இயலாது எனில், அதற்கு பதிலாக விபூதியை உடலில் பூசிக் கொள்ளலாம். இதுவும் நீராடலுக்குச் சமம் என்கிறது தர்ம சாஸ்திரம். தண்ணீரால் நீராடுவதை "வாருண ஸ்நானம்" என்றும், விபூதியைப் பூசிக் கொள்வதை "ஆக்னேய ஸ்நானம்" என்றும் சொல்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி பண்டிகை கவனமாகப் பட்டாசு வெடிப்பது எப்படி?





தீபாவளி பண்டிகையை சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள், பொது மக்கள் என அனைவரும் நாளை உற்சாகமாக கொண்டாடும் நிலையில் பட்டாசுகளை மிகவும் பாதுகாப்பாக வெடிக்க வேண்டும்.

பட்டாசு வெடிக்கும் சிறுவர்கள் உள்ளிட்ட அனைவருமே பட்டாசுகளை வெடிக்கும்போது பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். சமீப காலமாக தயாரிக்கப்படும் பட்டாசுகளில் பெரும்பாலானவை அதிக இரசாயனம் கொண்டவையாக உள்ளன. அந்தப் பட்டாசுகள் வெடிக்கும்போது தங்கம், வெள்ளியை உருக்கத் தேவைப்படும் அளவுக்கு அதிக வெப்பம் வெளியேறுகிறது.

பொதுவாகவே பட்டாசு விபத்துகள் நேரிடும்போது கைகளில்தான் அதிகம் காயம் ஏற்படும். இந்தப் பட்டாசு துகள்கள் கண்ணின் இமைப் பகுதிகள், விழிப்படலம், கண் நரம்புகளை பாதிக்கின்றன. அதற்கு உரிய நேரத்தில் சிகிச்சை பெறாவிட்டால் பார்வை இழப்பு, பார்வை திறன் குறைபாடு, விழித்திரை பாதிப்பு ஆகியவை ஏற்படக்கூடும்.

எனவே கண்களில் தீப்பொறியோ அல்லது பட்டாசு சிதறல்களோ படும் பட்சத்தில் கண்களை அழுத்தி தேய்க்கவோ, கசக்கவோ கூடாது. காயம் இருக்கும் இடத்தில் ஒத்தடம் கொடுக்கவும் கூடாது.

தூய்மையான நீரில் கண்களை திறந்த நிலையில் சிறிது நேரம் வைத்திருக்க வேண்டும். அந்த நிலையிலேயே மென்மையாக கழுவ வேண்டும்.

வைத்தியரிடம் ஆலோசனை பெறாமல் சுயமாக மருந்துகளோ, களிம்புகளோ தடவக்கூடாது. பட்டாசு காயங்களில் பார்வை இழப்பு ஏற்படுவதற்கு 50 சதவீதம் அலட்சியமே காரணமாக அமைகிறது.

எனவே உரிய விழிப்புணர்வுடன் செயற்பட்டால், அத்தகைய பாதிப்புகளை தவிர்க்கலாம்.

# எலுமிச்சை; ஆஹா பலன்கள்!



**திருஷ்டி கழிக்கப் பயன்படுத்தப்படும் எலுமிச்சைக்கே திருஷ்டி சுற்றித்தான் போட வேண்டும். அந்த அளவுக்கு எலுமிச்சை பலன் நிறைந்தது.**

## எலுமிச்சையின் ஆறு பலன்கள் இங்கே...

- வெளியூர் பயணத்தின்போது சிறுநீரகத் தொற்று ஏற்படாமல் இருக்க, எலுமிச்சைச் சாற்றைக் கையோடு எடுத்துச் செல்லலாம். எலுமிச்சைச்சாறு, சிறுநீரை அதிகரித்து, தொற்றுக்கள், நச்சுக்களை வெளியேற்றுகிறது.
- பொதுவாக, புளிப்புத் தன்மை கொண்ட பழங்கள், இரத்தக் குழாயைச் சுத்தப்படுத்தும். எலுமிச்சை, ஆன்டி ஒக்ஸிடன்டாகச் செயற்பட்டு, இரத்தத்தைச் சுத்திகரிக்கும். ஆன்டி பக்றீரியாவாகவும் இருப்பதால், சரும நோய்களை அண்டவிடாது.
- காலையில் வெந்நீரில் 5 - 10 மி.லி எலுமிச்சைச்சாறு கலந்து குடிப்பது, உடலில் உள்ள நச்சுக்களை நீக்க உதவும். இதய நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. கொலஸ்ட்ரால், உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும்.
- வாய் துர்நாற்றம், பல்லில் வலி, ஈறுகளில் இரத்தம் போன்ற பாதிப்புகள் இருந்தால், எலுமிச்சைச் சாற்றை, மிதமான வெந்நீரில் கலந்து வாய் கொப்பளிக்கச் சரியாகும்.
- கபம் அதிகம் இருந்தால், காலையில் எழுந்ததும் சளியுடன் கூடிய எச்சில், வாந்தி வருவது போன்ற உணர்வு இருக்கும். இவர்கள், 10 மி.லி எலுமிச்சைச் சாற்றுடன் 5 மி.லி இஞ்சிச் சாறு, சிறிது தேன் சேர்த்து, சுடுநீரில் கலந்து குடிக்கலாம். சட்டென நிவாரணம் கிடைக்கும்.
- சிலருக்கு, வயிற்றில் காற்று அடைத்ததுபோல், அழுத்தமாக இருக்கும். இதற்குச் சுடுநீரில் எலுமிச்சைச்சாறு, வறுத்துப் பொடித்த சீரகம் அரைக்கரண்டி, சிறிது தேன் கலந்து அருந்தலாம். சட்டென காற்று வெளியேறி, வயிறு லேசாகும். மலச்சிக்கல் பிரச்சினையும் இருக்காது.

# பூசணிக் கேக்



சமைப்போம் சுவைப்போம்

## தேவையானவை:



வேகவைத்து

அரைத்த பூசணிக்காய் – அரை கப்

முட்டை – 2, கோதுமை மா – ஒரு கப்

சர்க்கரை – ஒரு கப்

வெண்ணெய் – 200 கிராம்

பேக்கிங் பவுடர் – ஒரு கரண்டி

பேக்கிங் சோடா – அரை கரண்டி

வெனிலா எசென்ஸ் – ஒரு கரண்டி



## செய்முறை

ஒரு பாத்திரத்தில் வெண்ணெய் மற்றும் சர்க்கரையைச் சேர்த்து நன்கு கலக்கவும். பின்பு அதில் முட்டையை உடைத்து சேர்க்கவும். இதில் பூசணிக்காய் விழுதையும் சேர்த்து கலவையை நன்கு கலந்து வைக்கவும். பின்னர் இதில் கோதுமை மா, பேக்கிங் பவுடர், பேக்கிங் சோடா ஆகியவற்றைச் சலித்துச் சேர்க்கவும். பிறகு, அதில் வெனிலா எசென்ஸ் சேர்த்துக் கிளறவும். இறுதியாகக் கலவையை ஓவனில் 180 டிகிரி செல்சியஸில் 40 நிமிடங்கள் வேகவைத்து எடுக்கவும். பூசணி கேக் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி-னி-மா

# சின்னத்திரை டைரி



**மோகன் லாலின்** அடுத்தடுத்த மூன்று படங்கள் பெரும் வெற்றி பெற்றிருக்கின்றன. உலகளவில் 250 கோடி ரூபாய்க்கு மேல் வசூல் செய்து "எல்2: எம்புரான்" வெற்றி பெற்றது. அடுத்து... "தொடரும்", "ஹிருதய பூர்வம்" ஆகிய படங்கள் குடும்பம் குடும்பமாக மக்களால் பார்க்கப்பட்டு, வெற்றியைக் கொண்டுவந்து சேர்த்தன.



**தன்னுடைய** இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்கும் "ட்ரெயின்" படம் ரிலீஸுக்குத் தயாராகும் நிலையில், அடுத்த படத்தின் ஸ்கிரிப்டைத் தயார் நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறார் இயக்குநர் மிஷ்கின். இதற்கிடையே, இன்னொரு பக்கம் நடிப்பிலும் கவனம் செலுத்தி வருகிறார். அந்தவகையில், கீர்த்தி சுரேஷின் ஹீரோயின் சென்ட்ரிக் படம் ஒன்றில் முக்கியமான வேடத்தில் நடித்து வருகிறார் மிஷ்கின்.

## லக்ஷ்மி பிரியா



**நடிக்க வருவதற்கு முன்:**
சாஃப்ட்வேர் இன்ஜினியரா இருந்தேன். ஸ்கூல், காலேஜில் எல்லாம் நான்தான் டாப். நல்ல சம்பளமும்தான். எல்லாத்தையும் விட்டுட்டுதான் இந்தப் பக்கம் வந்தேன்.

**வீட்டில் யார் செல்லம்:**
அப்பா மிலிட்ரியில் இருந்தார். அதனாலே கூடவே இருந்ததில்லை. அம்மாதான் அப்பா ரோலையும் சேர்த்துப் பார்த்துக் கொண்டார். அதனால் அவர்கள் பேச்சைத் தட்ட மாட்டேன்!

**சீரியல் வாய்ப்பு வந்த கதை:**
இன்ஸ்டா மூலம் வந்தது. ஆரம்பத்தில் ஃபேக்கா இருக்கும் என்று நினைத்து நான் அதை நம்பவில்லை. கொஞ்சநாள் கழித்தே அதற்கு ரெஸ்பான்ஸ் செய்தேன். "மகாநதி" சீரியல் வாய்ப்பு இப்படித்தான் வந்தது.

ப்ளஸ் எதையும் கட் அண்ட் ரைட்டா பேசிவிடுவேன். பிறகு பார்க்கலாம் என்கிறதோ, எதற்கும் தயங்கிகொண்டு இருக்கிறதோ, எனக்குப் பிடிக்காது. மாடலிங், சீரியல், சினிமா... ஆரம்பத்தில் நான் தேர்ந்தெடுத்தது மாடலிங். சீரியல் இப்போது நன்றாகவே போய்க்கொண்டிருக்கிறது. சினிமாவில் நாளைக்கு நல்லவொரு இடத்தில் இருப்பேன் என்று நம்புகிறேன்.



**"இட்லி கடை"** வெற்றியைத் தொடர்ந்து தேனியில் உள்ள தனது குலதெய்வம் கோயிலுக்குக் குடும்பத்தினருடன் சென்று பொங்கல் வைத்து வழிபாடு செய்திருக்கிறார் தனுஷ். அண்ணன் செல்வராகவன் குடும்பத்தினரும் இதில் கலந்துகொண்டார்கள். கோயிலுக்கு வந்த பொதுமக்களிடம் அன்பாகப் பேசியும், அவர்களின் குழந்தைகளுடன் நேரம் செலவழித்தும், ஊர் மக்களிடம் பாராட்டுகளை வாங்கி வந்துள்ளார் தனுஷ்.



**ஹீரோவாக** மட்டுமன்றி, முக்கிய எதிர்மறை நாயகனாகவும் நடிக்க ரெடியாகி வருகிறார் ரவி மோகன். லோகேஷ் கனகராஜ், அடுத்தடுத்து தான் இயக்கவிருக்கும் "விக்ரம் 3", "கைதி" படங்களில் ஹீரோவுக்கு இணையாக வில்லன் வேடத்தை ரவிக்குத் தருவதாகச் சொல்லியிருக்கிறாராம்.

## சொல்லவே இல்ல...

# நவீன்



"சின்ன வயதில் கூட இருந்த நண்பர்கள் அத்தனை பேரும் இப்பவும் கூடவே இருக்கிறார்கள். இந்த காங்கில் நாங்கள் செய்த சேட்டை கொஞ்ச நஞ்சமல்ல. அப்போது எனக்கு ஒரு பழக்கம் இருந்தது. அதாவது முன்ன பின்ன தெரியாதவர்கள் வீட்டு ஃபங்ஷனானாலும், பசங்க நாங்கள் புகுந்துவிடுவோம். நல்லா சாப்பிட்டுட்டு தான் திரும்புவோம். சும்மா ஃபண்ணா ஆரம்பித்தோம். நிறைய நிகழ்ச்சிகளில் இந்த மாதிரி போய் கலந்துகொண்டு சாப்பிட்டுட்டு வந்திருக்கேன். "டேய், இதெல்லாம் தப்புடா" என்று மனது சொன்னாலும், சும்மா ஜாலிக்குத்தானே என்று அதைக் கன்வின்ஸ் செய்துவிட்டு கண்டினியூ செய்து கொண்டிருந்தேன். ஆனால் இப்போது கிடையாது. இப்போது நினைத்தாலும் செய்ய முடியாது என்ன?"



**பிரதீப் ரங்கநாதனின்** "டியூட்" தீபாவளி கொண்டாட்டமாகத் திரைக்கு வருகிறது. "படத்தின் கதையை முதலில் கேட்டதும் அதில் நடிக்கத் தயங்கினேன். இந்தக் கதையில் நடித்தால் காமெடி பீஸாகக் கருதுவார்களோ என்ற எண்ணம்தான் காரணம். ஒருகட்டத்தில் தைரியமாகத் தலையாட்டி விட்டேன். படத்தைப் போட்டுப் பார்த்த பிறகுதான் இந்தப் படம் என்னோட பெஸ்ட் பார்ட் என்பதை உணர்ந்தேன்" என்று சிலாகிக்கிறார் பிரதீப் ரங்கநாதன்.



**கலைப்புலி தாணுவின்** தயாரிப்பில் வெற்றிமாறன் இயக்கத்தில் சிலம்பரசன் நடிக்கும் படத்துக்கு "அரசன்" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். வடசென்னைப் பின்னணிதான் கதைக்களம். அதன் படப்பிடிப்பில் பங்கேற்பதற்கு முன்னர் சிலம்பரசன், தாய்லாந்து சென்று சில மார்ஷியல் ஆர்ட்ஸ் கற்று வந்ததுடன், புதுத் தோற்றத்திற்கும் மாறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல் 467

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# கருத்தரிப்பதற்கு முன் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயங்கள்...

மகப்பேறு அல்லது குழந்தையை பெற்றெடுப்பது என்பது ஒரு பெண்ணிடம் மட்டும் தங்கியிருப்பதில்லை. இது, தம்பதியினரான ஆண், பெண் இருவரிலும் தங்கியுள்ளது. இதற்கு, உடல் ஆரோக்கியம் எந்த அளவு முக்கியமோ அந்த அளவுக்கு உள ஆரோக்கியமும் முக்கியமாகும். ஒரு பெண் கர்ப்பம் தரித்து, மருத்துவரை நாடும் போது, கர்ப்ப காலத்தில் எட்டு தொடக்கம் பன்னிரண்டு வாரங்கள் ஆகின்றன. ஆனால், அதற்கு முன்பே பல விடயங்கள் நடந்தேறுகின்றன. கர்ப்பம் தரித்ததில் இருந்து, அதாவது கருக்கட்டியதில் இருந்து பன்னிரண்டு வாரங்களுக்குள், குழந்தையின் பெருமபாலான அங்கங்கள் உருவாகி முடிகின்றன. கர்ப்பம் தரித்து நீங்கள் மருத்துவரை நாடும் போது, குழந்தையின் பெரும்பாலான அங்கங்கள் உருவாகி விடுவதால், கர்ப்பத்திற்கு முன், உங்களை தயார் செய்து கொள்வது மிகவும் முக்கியம். அது உடல் ரீதியாகவும் இருக்கலாம் அல்லது உள ரீதியாகவும் இருக்கலாம்.

ஒரு பெண், கர்ப்பம் தரிக்க நினைப்பதற்கு முன் பல்வேறு விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக, உடல் நிறையில் கவனம் செலுத்த வேண்டும். உயரத்திற்கு ஏற்ற நிறையை கொண்டிருத்தல் அவசியம். அதனால், பொதுவாக உடல் நிறை, உடல் திணிவு சுட்டெண் மூலம் கணிக்கப்படுகிறது. ஒரு பெண்ணின் உடல் நிறையை கிலோகிராமிலும், உயரத்தை மீற்றரிலும் வைத்து உடல் திணிவுச் சுட்டெண் கணிக்கப்படுகிறது. 18.5 - 24.9 வரை சாதாரண உடல் திணிவுச் சுட்டெண் என கருதப்படுகிறது. அதாவது, 18.5 ஐ விட குறைந்த உடல் திணிவுச் சுட்டெண் உடையவர்கள், நிறை குறைந்தவர்கள் என்றும், 24.9 ஐ விட கூடிய உடல் திணிவுச் சுட்டெண் உடையவர்கள், நிறை கூடியவர்கள் என்றும் வகைப்படுத்தப்படுகிறார்கள். ஒரு பெண்ணின் ஹோர்மோன் அளவிற்கும், அவர்களுடைய உடல் நிறைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அதாவது, உடல் நிறை குறைந்த பெண்ணை எடுத்தால், அவர்களது உடற்சிறப்புகள், ஹோர்மோன் அளவுகள் மாற்றமடைந்து காணப்படலாம். இதனால், அவர்களது சூலக தொழிற்பாடு பாதிப்படைந்திருக்கலாம். அதன் காரணமாக அவர்களது மாதவிடாய் சக்கரத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். அதனால், கருத்தரிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம். கருத்தரித்தாலும் கூட, மிகவும் நிறை குறைந்த பெண்களுக்கு கருச்சிதைவோ அல்லது வேறு பிரச்சினைகளோ ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும்.



உதாரணமாக, அவர்களுக்கு நிறை குறைந்த குழந்தை பிறக்கலாம், குறை மாதத்தில் குழந்தை பிறக்கலாம், குழந்தை பிறந்த பின்னர் குழந்தையை பராமரிப்பதில், பாலூட்டுவதில் சில பிரச்சினைகள் இருக்கலாம். நிறை குறைந்தவர்களுக்கு கூந்தளவு பிரச்சினையாக இருக்கிறதோ அதே அளவு, நிறை கூடியவர்களுக்கும் அவர்களது ஹோர்மோன் செயற்பாடுகளால், மாதவிடாய் சக்கரம் குழப்பமடையலாம். அதோடு, Polycystic ovarian syndrome (PCOS) என்ற பிரச்சினை உடைய பெண்களின் நிறை கூடும் போது, அவர்களது பிரச்சினை மேலும் பன்மடங்காக அதிகரிக்கிறது. இதனால், அவர்கள் கருத்தரிப்பதில் மிகவும் சிக்கல் ஏற்படுகிறது. இவர்கள் கருத்தரித்தாலும் கூட, கருச்சிதைவிற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். அத்துடன், ஒரு நிறை கூடிய பெண் கருத்தரிக்கும் போது, அவர்களுக்கு நீரிழிவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது. அதேபோல் உயர் குருதி அமுக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பமும் அதிகமாகும். அத்துடன் நிறை கூடிய பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் நிறை கூடியவையாக இருக்கின்றன. ஆகவே, அத்தகைய நிறை கூடிய குழந்தையை பிறப்பிப்பதிலும் பல சிக்கல்கள் ஏற்படலாம். சில சமயங்களில், நிறை கூடிய குழந்தையை அறுவை சிகிச்சை மூலம் கூட பிறப்பிக்கக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது. ஆக நிறை கூடினாலும் பிரச்சினை ஏற்படுகிறது. நிறை குறைந்தாலும் பிரச்சினை ஏற்படுகிறது. ஆகவே தான், கர்ப்பம் தரிப்பதற்கு முதல் உங்களுடைய நிறையை இயன்றளவு சாதாரண நிறையில் பேணுவது சிறந்தது. நிறை குறைந்தவர்கள், நிறையை கூட்ட வேண்டும், அதே போல் நிறை கூடியவர்கள், நிறையை குறைக்க வேண்டும்.

இரண்டாவது, நாட்பட்ட நோய்கள் உள்ளவர்கள் கர்ப்பம் தரிப்பது குறித்து மிகவும் கவனம் எடுக்க வேண்டும். பலர் தமக்கு நாட்பட்ட நோய்கள் இருப்பது தெரியாமல் தான் கர்ப்பம் தரிக்கின்றனர். எமது சமூகத்தில் தற்போது பல இளம் பெண்கள் இரத்தச்சோகை நோய்க்கு ஆளாகியுள்ளனர். இது தவிர அவர்களுக்கு நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், இதய நோய், வலிப்பு போன்ற பல்வேறு நோய்கள் காணப்படலாம். இந்த நோய்கள் இருப்பது அவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆகவே, கர்ப்பம் தரிக்க முன் இவற்றை சீர் செய்து, அதன் பின்னர் கர்ப்பம் தரித்தால் பல்வேறு பிரச்சினைகளை தடுக்கலாம். உதாரணமாக, இரத்தச்சோகை உடைய பல பெண்களுக்கு இரத்த வீதம் அல்லது Haemoglobin இன் அளவு மிகவும் குறைவாக காணப்படுகின்றது. அவர்கள் கர்ப்பம் தரிக்கும் போது, கர்ப்ப காலத்தில் குழந்தையின் வளர்ச்சிக்கும், உடலில் ஏற்படும் மாற்றங்களிற்கும், குழந்தையை பிரசவிக்கும் போதும், பாலூட்டும் போதும் அவர்களது இரத்த தேவை அதிகரிக்கிறது. எமது பகுதியில் இரும்புச்சத்து குறைப்பாட்டால் ஏற்படும் இரத்தச்சோகையே அதிகமாக இருக்கிறது. இதனை, எமது சமூகத்தில் எளிதில் கிடைக்கும் ஆரோக்கியமான உணவு வகைகளை உண்பதன் மூலம் நன்றாக நிவர்த்தி செய்யலாம். உதாரணமாக, கீரை வகைகள், இறைச்சி, ஈரல் போன்ற சத்துள்ள உணவுகளை உட்கொண்டால் பெண்களின் இரத்த வீதம் மிகவும் வேகமாக அதிகரிக்கும்.

தற்போது, பேரீச்சம்பழம் சாப்பிட்டு இரத்த வீதத்தை அதிகரிப்பது என்ற ஒரு பிழையான அபிப்பிராயம் நமது சமூகத்தில் இருக்கிறது. அதற்காக பேரீச்சம்பழம் சாப்பிட வேண்டாம் என்று கூறவில்லை. அதைவிட சத்துள்ள கீரை வகைகள், ஈரல், இறைச்சி, மீன் போன்றவற்றை கூடுதலாக உட்கொள்வது சிறந்தது. தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் இரும்புச் சத்து மருந்துகளை எடுத்து, இரத்த வீதத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

அதேபோல், நீரிழிவு என்பது நமது சமூகத்தில் மிகப்பெரிய சவாலான பிரச்சினையாக காணப்படுகின்றது. கர்ப்பிணிகளில் நான்கில் அல்லது ஐந்தில் ஒருவருக்கு ஏதேனும் ஒரு வகையான நீரிழிவு நோய் காணப்படுகின்றது.

(தொடரும்)

Dr. சி. சிறீதரன்
பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உணவுக்கு உலக அளவில் பாராட்டு

(கொழும்பு)

உலகில் உணவுக்கு சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் தனது பெயரை நிலைநாட்டியுள்ளது.

2025 வாசகர்களின் தேர்வு விருதுகளின் அடிப்படையில் உலகில் உணவுக்கு சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை 7 ஆவது இடத்தில் உள்ளதுடன் 95.56 புள்ளிகளை இலங்கை பெற்றுள்ளது.

98.33 புள்ளிகளுடன் முதல் இடத்தில் தாய்லாந்தும், 96.92 புள்ளிகளுடன் இத்தாலி இரண்டாவது இடத்திலும், 96.77 புள்ளிகளுடன் ஜப்பான் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

குறித்த தரப்படுத்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு நாடும் மக்களிடையே பிரபலமாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உணவுகளுக்கான மசாலா, நிறம் மற்றும் தேங்காய் ஆகியவற்றின் அற்புதமான கலவையால் இலங்கை குறித்த இடத்தைப் பெற்றுள்ளதாகத் தரப்படுத்தல் குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் உணவுகளான கொத்து ரொட்டி, அப்பம் போன்றவை சிறந்த தெரிவுகளாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இலங்கை உணவு வகைகளில் பெரும்பாலானவை வீட்டுச் சமையல் மரபுகளை மையமாகக் கொண்டுள்ளன, மேலும் தலைமுறைக் குடும்ப சமையல் குறிப்புகளின் இந்த அன்பான தொடுதல்தான் இங்குள்ள உணவை உண்மையில் சிறப்புறச் செய்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# கந்தசஷ்டி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீர கத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை ,வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று முருகப்பெருமான் திருவீதிவலம் வருவார். தொடர்ந்து தினமும் மாலை 4.30 மணிக்கு விஷேட பூஜைகள் ஆரம்பமாகும், 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்திபூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெற்று முருகப்பெருமான் திருவீதிவலம் வருவார் என்பதனை ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார். (8)

## இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின்
# 12 ஆவது ஆண்டு நிறைவு விழா

(இளவாலை)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வாலிபத் தீபாவளிக் கொண்டாட்டமும் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

கலை, கலாசார நிகழ்வுகள், கௌரவிப்பு நிகழ்வுகள், வானவேடிக்கைகள், நடன நிகழ்வுகளும் நிறைவாகக் "சுருதிலயா" இசைக்குழுவின் இசைநிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)


## காணி விற்பனைக்கு

யாழ் நல்லூர் குறோஸ் றோட்டில் 1 ¾ பரப்பு துண்டுகளாக 3 உம், 2 பரப்பு துண்டுகளாக ஒன்றுமாக பிரிக்கப்பட்ட 4 காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரமறிய காணி உரிமையாளரைத் தொடர்பு கொள்க

076 494 9495
+61416959213
(Whatsapp)

(C-4137)

## மணமக்கள் தேவை

சூரிய செவ்வாய் வெளிநாட்டு மணமக்களுக்கு மணமக்கள் தேவை.

077 889 4353 (Whatsapp)
0049764752219 (Viber)
00491741789740 (Whatsapp)

(1659)

## காணி விற்பனைக்கு

A9 வீதி, இயக்கச்சி சந்தியில் இருந்து 3 நிமிடத்தில் அடையலாம்.

- மின்சார வசதிகள் உண்டு
- காணிக்கு செல்லும் வரை கார்ப்பெட் வீதி

96 பரப்பு (தேவைக்கேற்ப பரப்புக்கள் பிரித்து வழங்கப்படும்)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

076 484 8614
076 604 0203

(C-4138)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் உயரப்புலம் வீதி, ஆனைக் கோட்டையில் 6 பரப்புடன் கூடிய, வாகனத்தரிப்பிடம் உட்பட அனைத்து வசதிகளும் கொண்ட வீடு நிறுவனங்களுக்கு வாடகைக்குண்டு.

தொடர்புக்கு
077 651 2037

(1658)

## மணமகன் தேவை

1992, இந்து, பூரட்டாதி, DOCTOR
பூர்வீகம் - வேலணை, வதியுமிடம் - கொழும்பு
மணமகள் பதிவு இல: 11886.
தீபாவளி சலுகை 20/10/2025 வரையான பதிவுகளுக்கு 80% கழிவு
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EOMarriageService.com

## மலிவு விற்பனை - Printers

சகல வகையான கணனி Printerகளும் மிக மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ள முடியும்.

ST.ANTONYS COMPUTER
189, K.K.S ROAD, JAFFNA TOWN, JAFFNA.
021 222 4865 / 077 063 3408

(C-4136)

## மணமகள் தேவை

1992, இந்து, கார்த்திகை, DOCTOR
பூர்வீகம் -முல்லைத்தீவு , வதியுமிடம் -வவுனியா
மணமகன் பதிவு இல: 11086.
தீபாவளி சலுகை 20/10/2025 வரையான பதிவுகளுக்கு 80% கழிவு
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EOMarriageService.com

## பணியாளர் தேவை

எமது நிறுவனமான உல்லாசப் பயணிகள் விடுதிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தேவையாக உள்ளது.

- Waiter - (Room Boy) (3 மொழிகளும் தெரிந்தவர் விரும்பத்தக்கது.)
- காவலாளி
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர் (பெண் பணியாளர்களும் விரும்பத்தக்கது)
- Bill Clark (3 மொழிகளும் தெரிந்தவர் - பெண் பணியாளர்களும் விரும்பத்தக்கது)

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
077 601 6310, 077 243 1310

(C_4135)

## A/L PHYSICS CLASS

விஞ்ஞான பட்டதாரி ஆசிரியரால் தனிப்பட்ட, குழு வகுப்புக்கள் நடாத்தப்படும். வீடு வந்தும் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
077 600 4896

(5681)

## வீடு, காணி தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, முத்திரைச் சந்தி மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் நல்ல சூழலில் வீட்டுடன் அல்லது வெறும் காணி (2 பரப்பில்) உடன் தேவை. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

(தரகர் தேவையில்லை)

076 472 2467

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி. குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368
யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி
(முன்பதிவு செய்து வரவும்)

(5620)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS,UKVI, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

Special offer 50% Pratical on Computer
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970

(5645)

## விற்பனைக்கு

No 72, மானிப்பாய் இணுவில் பிரதான வீதியில் சுதுமலை வடக்கு மானிப்பாயில் 6 பரப்பு வீடு சுற்றிவர மதிலுடன் விற்பனைக்குண்டு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
Sivasakthy Palan (Jeeva)
077 474 3499

(1653)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை மாளிகை வந்த ஜெலன்ஸ்கியை உற்சாகமாக வரவேற்ற ட்ரம்ப்



(வோஷிங்டன்)

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர், மூன்று ஆண்டுகளைக் கடந்துள்ளது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஈடுபட்டுள்ளார்.

கடந்த ஒகஸ்டில் அலாஸ்காவில் இருவரும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இருந்தும் போர் நிறுத்தத்துக்கான நடவடிக்கையில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

இதற்கிடையே, ஜனாதிபதி ட்ரம்ப் சமூக ஊடக பதிவில் வெளியிட்டுள்ள அறிவிப்பில், ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் தொலைபேசியில் பேசினேன். இது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் மிகப்பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஜனாதிபதி புடினை ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ட்டில் சந்தித்து போர் நிறுத்தம் குறித்து பேச திட்டமிட்டுள்ளேன். சந்திப்புக்கான திகதி இன்னும் இறுதி செய்யப்படவில்லை. இரு வாரங்களுக்குள் இந்தச் சந்திப்பு நடக்கும் என தெரிவித்தார்.

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வெள்ளை மாளிகைக்குச் சென்றார். அவருக்கு அங்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வாசலில் வந்து வரவேற்றார் ஜனாதிபதி ட்ரம்ப்.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி புடினுடன் நடந்த உரையாடல் விபரங்கள் மற்றும் உக்ரைனுக்கு ஏவுகணை வழங்குவது உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது. (நி)

# ஆப்கான் எல்லை அருகே தற்கொலைத் தாக்குதல்!

## மூன்று பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்கள் உட்பட ஏழு பேர் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகே கடந்த வெள்ளிக்கிழமை நடந்த தற்கொலைத் தாக்குதலில் மூன்று பாகிஸ்தான் வீரர்கள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டதாக இஸ்லாமாபாத் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்லாமாபாத் - காபூல் இடையேயான பலவீனமான போர்நிறுத்தம் முன்னாள் நட்பு நாடுகளுக்கு இடையேயான கடுமையான மோதலை நிறுத்திய நிலையில் இந்த தாக்குதல் நடந்துள்ளது.

தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் உடன் தொடர்புடைய ஒரு தற்கொலைக் கார் குண்டுதாரி வடக்கு வசிரிஸ்தானின் மிர் அலியில் உள்ள பாதுகாப்புப் படை வளாகத்தில் மோதியதாகவும், துப்பாக்கிச் சண்டையில் மூன்று போராளிகள் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு வாரமாக நீடித்த தீவிர எல்லைச் சண்டையில் இரு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை இரு நாடுகளுக்கு இடையிலும் 48 மணிநேர போர் நிறுத்தமானது அமுலுக்கு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மலேசியாவில் புதிய வகை கொரோனா 6 ஆயிரம் மாணவர்கள் பாதிப்பு

(மலேசியா)

மலேசியாவில் அதிகரித்து வரும் புதிய வகை கொரோனா மற்றும் மர்ம காய்ச்சல் காரணமாக நாடு முழுவதும் சுமார் 6,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பல பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

மலேசியாவில் அண்மையில் எக்ஸ்.எப்.ஜி. (XFG) என்ற புதிய வகை கொரோனாத் தொற்று பரவி வருகிறது. இந்த வகை கொரோனா, இந்தியாவில் சில மாதங்களுக்கு முன்னர் அடையாளம் காணப்பட்டது. இந்தக் கொரோனா பரவலுடன், இன்புளுவன்சா பாதிப்பும் பலரிடம் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், மர்மக் காய்ச்சலும் அதிகரித்து வருகிறது.

பாடசாலைகளில் இந்தக் காய்ச்சல் பரவல், ஒரே வாரத்தில் 14 ஆக இருந்த நிலையில், தற்போது 97 கொத்தணிகளாக அதிகரித்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் சுமார் 6,000 மாணவர்கள் இந்த மர்மக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக, பல பகுதிகளில் உள்ள பாடசாலைகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தற்காலிக அடிப்படையில் மூடப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 5 முதல் 7 நாட்கள் வரை தனிமைப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால், மாணவர்களுக்கு இணைய வழியே பாடங்களை நடத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அதிக அளவில் ஒன்றுகூடுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும், முகக்கவசம் அணியவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பும் இந்த கொரோனா வைரஸை கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட வேண்டிய ஒரு வகையாக வகைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பாக்-ஆப்கான் மோதலை தீர்ப்பது எளிது-ட்ரம்ப்

(வோஷிங்டன்)



இந்தியா பாகிஸ்தான் மோதல் உட்பட எட்டு உலகளாவிய போர்களை தீர்த்து விட்டேன் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

நான் ஒவ்வொரு முறையும் ஒரு பிரச்சினையைத் தீர்க்கும்போது, அடுத்ததைத் தீர்த்தால், உங்களுக்கு நோபல் பரிசு கிடைக்கும் என்று அவர்கள் சொன்னார்கள்.

எனக்கு நோபல் பரிசு கிடைக்கவில்லை. யாரோ ஒருவர் அதைப் பெற்றார். மிகவும் நல்ல பெண். ஆனால் எனக்கு அது கவலையில்லை. எனக்கு உயிர்களைக் காப்பாற்றுவதுதான் முக்கியம். இவ்வாறு ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார். (நி)

# வங்கதேசத்தில் மீண்டும் போராட்டம்

(டாக்கா)

வங்கதேசத்தில் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு நடைபெற்று வருகிறது. இந்த அரசு நேற்று முன்தினம் ஜூலை சாசனத்தில் கையெழுத்திட்டது. இதற்கு எதிராக போராட்டம் வெடித்தது. நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் தேசிய பாராளுமன்ற வளாகத்தில் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் கலைந்து செல்ல வலியுறுத்தினர் அப்போது மோதல்



ஏற்பட்டது.

இதனால் பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசியும், தடியடி நடத்தியும் அவர்களை கலைத்தனர்.

புதிய சாசனம் குறித்த தங்களது கவலைகளை நிவர்த்தி செய்யவில்லை என்ற கோபத்தில் போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஷேக் ஹசீனாவை வெளியேற்ற காரணமாக இருந்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதில் பொலிஸார் வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. தற்காலிக கூடாரங்களும் சேதப்படுத்தப்பட்டன. பாதுகாப்பிற்கு நின்றிருந்த இராணுவ வீரர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஏராளமானோர் காயம் அடைந்தனர்.

வங்கதேசத்தில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஷேக் ஹசீனா அரசுக்கு எதிராக திடீரென வாலிபர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஷேக் ஹசீனா, பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் அடைக்கலமானார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம். – பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மெய்ஞானத்துறவி தந்த திருமறைக் கலாமன்றம்

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் தனது அறுபதாவது அகவை நிறைவில் வைர விழாவை கொண்டாடுகிறது.

அமரத்துவமடைந்த வணக்கத்துக்குரிய மரியசேவியர் அடிகளாரின் சிந்தனையில் உதித்த திருமறைக் கலாமன்றம் எங்கள் தமிழ் கலைப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றி வருகிறது.

ஆம், தமிழர்களாகிய எங்களின் வாழ்வியல் என்பது எங்கள் கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றினூடு உயிர்வாழ்வது.

எனினும் உலகியல் மாற்றங்களும் நவீன தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிகளும் எங்கள் கலை அம்சங்களில் கடுமையான எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இருந்தும் அருட்திரு.மரியசேவியார் அடிகளாரின் புனிதமான கலைப்பணி காரணமாக, எங்கள் மரபுவழிக் கலை அம்சங்கள் இன்னமும் பாதுகாக்கப்பட்டு வருவதுடன் அவை நவீனத்துக்கு ஏற்றதாகவும் ஆற்றுப் படுத்தப்படுகிறது.

இந்த உயரிய பணியில் திருமறைக் கலாமன்றத்தின் அறுபது ஆண்டு கால கலைப் பணியை தமிழ் மண் ஒருபோதும் மறந்துவிட முடியாது.

அதிலும் தமிழியல் கூறும் கலை அம்சங்களைத் தூய மனத்தோடு பாதுகாத்து, படைப்பாளிகளை உருவாக்கிய மரியசேவியர் அடிகளாரின் கலைப் பணியை ஈழத்து மண் ஒரு போதும் மறந்துவிடலாகாது.

உண்மை. மரியசேவியர் அடிகளார் இந்த மண்ணில் வாழ்ந்த மெய்ஞானத்துறவி. தமிழுக்காகவும் கலைக்காகவும் தன் துறவு வாழ்வை அர்ப்பணித்தவர்.

அவரிடம் சமய பேதம் மருந்துக்கும் இருந்ததில்லை. கலையை அவர் தன் வழிபடு கடவுளாக நேசித்தார்.

வழிபடு கடவுளுக்குள் சமயம், மொழி, இனம், நிறம் எனும் பேதம் ஏது.

ஆம், திருமறைக் கலாமன்றம் இன்று அறுபதாவது அகவையில் வைரவிழாக் காண்கிறது எனில், அதற்கு மூலகாரணம் மரியசேவியர் அடிகளாரின் பாசறையில் வளர்ந்த – கலைக்காகத் தங்களை அர்ப்பணிக்கின்ற – தங்கள் குருவின் மெய்யுணர்வை உணர்ந்த திருமறைக் கலாமன்றத்தின் நிர்வாகிகளும் கலைஞர்களும் தொண்டர்களும் என்ற உண்மையை இந்த இடத்தில் கூறித்தானாக வேண்டும்.

அறுபது ஆண்டுகாலக் கலைப்பணியை ஆற்றி நிற்கும் திருமறைக் கலாமன்றத்தின் பணி என்றென்றும் தொடர வானுலகில் இருக்கும் அருட்திரு மரியசேவியர் அடிகளாரின் ஆசியை வேண்டி நிற்போமாக.

## சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் பிரேரணை தயார் என ஐ.ம.சக்தி அறைகூவல்

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிராக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பிரேரணை வரைவு தயாரிக்கும் பணி நிறைவடைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா அறிவித்துள்ளார்.

இந்த நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின் வரைவு எதிர்வரும் 21 ஆம் திகதி எதிர்க்கட்சிகளின் கட்சித் தலைவர்களிடம் சமர்ப்பிக்கப்படும் என்று உறுதிப்படுத்தியுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கட்சித் தலைவர்களின் ஒப்புதல் கிடைத்தவுடன் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இந்த நம்பிக்கையில்லாத்தீர்மானத்தில் கையெழுத்துப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அதன் பின்னர் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எந்தக் காரணமும் இன்றி சபாநாயகர் நிராகரித்தார். இதன் மூலம் அவர் பாராளுமன்றத்தை வழிதவறச் செய்தார். ஆகவே இச் சபாநாயகர் மீதான நம்பிக்கை இழந்ததாலேயே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

எனவே, எதிர்க்கட்சிகளின் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பாராளுமன்றத்திற்கு மிக விரைவாகக் கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார். (ம-7)

## நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

(ராஜங்கனை)

கனமழை காரணமாக ராஜங்கனை நீர்த்தேக்கத்தின் ஆறு வான்கதவுகளும் அங்கமுவ குளத்தின் இரண்டு வான்கதவுகளும் தற்போது திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அப்பகுதிகளில்பெய்து வரும் பலத்த மழை காரணமாக நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால்மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக இந்தக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் தாழ்வான பகுதிகளில் மற்றும் இந்த நீர்த்தேக்கங்களின் கீழ் பாயும் ஆற்றுப் படுக்கைகளில் வசிக்கும் மக்கள், அவதானமாக இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (ம-7)

## முச்சக்கரவண்டி விபத்து 9 வயதுச் சிறுவன் பலி

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - காவத்த முனைப் பகுதியில் நேற்று (18) இடம்பெற்ற கோர விபத்தில் 9 வயதுச் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சிறுவன் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டி வீதியில் நிறுத்தப்பட்டிருந்த சிறிய ரக உழவு இயந்திரத்தைக் கடந்து செல்ல முயன்ற போதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

முச்சக்கரவண்டியில் இருந்து சிறுவன் திடீரென உழவு இயந்திரத்தில் தூக்கி வீசப்பட்டதில் படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் சடலம் தற்போது வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

புத்தளத்தில் புதிதாகத் திறக்கப்படவிருந்த மோட்டார் சைக்கிள் காட்சி அறையை அலங்கரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் புத்தளம் நகரைச் சேர்ந்த 24 வயதான தண்டநாராயண நவோத் கிம்ஹான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

புத்தளம் திலாடிய பகுதியில் மோட்டார் சைக்கிள் காட்சி அறையைப் புதிதாகத் திறப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை அலங்காரத்திற்காகப் பயன்படுத்தப்படும்பலூன் மின்சாரக் கம்பியில் விழுந்ததில் இளைஞர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

மின்சாரம் தாக்கியதில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இளைஞன் புத்தளம் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போது ஏற்கனவே உயிரிழந்துளளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மக்கள் பங்களிப்புடன் வரவு செலவுத் திட்டம்

### பரு.பிரதேசசபை முன்மாதிரி

(புலோலி)

பருத்தித்துறைப் பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை மக்கள் பங்களிப்புடன் தயாரிக்கும் முன்மாதிரியான செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக நேற்று (18) பிற்பகல் புலோலி கிழக்கு, 6ஆம் வட்டார மக்கள் உடனான சந்திப்பொன்று நடைபெற்றது.

பிரதேச சபைத் தவிசாளர் உ.யுகதீஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் 6ஆம் வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளைப் அப்பகுதி மக்கள் முன்வைத்தனர்.

இந்த மக்கள் கலந்துரையாடலில் பிரதேச சபையின் உப தவிசாளர் திரு.உமாகாந்தன், பிரதேச சபை உறுப்பினர் புலோலியூர் ரமணன், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மற்றும் 6ஆம் வட்டாரத்திற்குட்பட்ட கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ம-7)

## நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கும் சான்றுப் பொருட்களை அகற்றுக

### நீதிச்சேவை ஆணைக்குழு பணிப்புரை

நீதிமன்ற வளாகங்களில் குவிந்து கிடக்கும் வழக்குகளின் சான்றுப் பொருட்களை எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் முழுமையாக அகற்ற வேண்டும் என நீதிச் சேவை ஆணைக்குழு அவசர சுற்றுநிருபமொன்றை வெளியிட்டுள்ளது.

சான்றுப் பொருட்கள் தேங்கிக் கிடப்பதால் ஏற்படும் இட நெருக்கடியைக் குறைக்கவும் நீதிமன்ற வளாகங்களைப் பேணவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் டி.எம்.ஜே. திஸாநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள இந்தச் சுற்றறிக்கை அனைத்து மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேல்நீதிமன்றத்தின் வழக்கு பொருள் உள்ள அறையை அல்லது காப்பகத்தைத் திறப்பது மேல் நீதிமன்ற நீதிபதியால் நியமிக்கப்படும் பொருத்தமான அதிகாரியின் நேரடி மேற்பார்வையின் கீழ் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாவட்ட நீதவான் நீதிமன்றம் அல்லது நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு பொருள் அறை அல்லது காப்பகத்தை மாவட்ட நீதிபதி, நீதவான், மேலதிக மாவட்ட நீதவான் அல்லது மேலதிக நீதவான் ஆகியோரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இடம்பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கு பிரதேச சபையின் அனுமதி அவசியம்

## தவிசாளர் பாலேந்திரன்

(வவுனியா)

**ஆழ்துளைக் கிணறுகள் அமைக் கும் போது பிரதேச சபையின் அனுமதி அவசியம் என வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் பா.பாலேந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் ஊட கங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா தெற்கு, தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் ஆழ்துளைக் கிணறு களை அமைக்கும் போது பிரதேச சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிக ளில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நிமித் தம் ஆழ்துளை கிணறுகள் அமைப்பதை தடைசெய்வது தொடர்பாக கடந்த சபை அமர்வில் கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய சில காணிகளில் பாறைகள் உள்ளமையால் சாதாரண கிணறுகள் அமைக்க முடியாத சந்தர்ப் பங்களும் பொதுமக்களுக்கு ஏற்படு கின்றன.

இதேவேளை சில பகுதிகளில் 200 அடிவரை ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கின்றனர். இவ்விடயங்கள் தொடர்பாக நாம் ஆராய்ந்துள்ளோம்.

எனவே, இவற்றைக் கருத்தில் கொண்டு நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்குடன் இனிவரும் காலங்களில் சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதா யின் பிரதேசசபையின் அனுமதியி னையும் பெற்றுக் கொள்ளுமாறு வலி யுறுத்தி தேசிய நீர்வழங்கல் வடி காலமைப்புச் சபைக்கு உத்தியோக பூர்வமாக அறிவிப்பதற்கான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார். (8-250)

# சுகாதாரமற்ற முறையில் பன்றி வளர்ப்பு உரிமையாளருக்கு சட்ட நடவடிக்கை

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கோம்பாவில் பகுதியில் சுகாதாரமற்ற முறையில் பன்றிகளை வளர்த்து வந்த நபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்புச் சுகாதார பரி சோதகர்களுக்கு கிடைக்கப்பெற்ற தக வலையடுத்து அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டபோது, குறித்த நபர் தனது வீட்டு வளாகத்தில் பத்திற்கும் அதிகமான பன்றிகளை சுகாதாரமற்ற முறையில் வளர்த்து வருவது தெரியவந்துள்ளது.

அத்துடன் பன்றிகளின் மலக் கழிவுகள் முறையாக அகற்றப்படாமல் சுற்றுப் புறத் திலேயே வெளியேற்றப்பட்டு துர் நாற்றம் வீசும் நிலையில் காணப் பட்டன.

இதனைத் தொடர்ந்து, பொதுச்சுகா தார பரிசோதகர்கள் குறித்த பன்றி உரிமையாளருக்கு எதிராக முல்லைத் தீவு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந் துள்ளனர். இதற்கமைய, எதிர்வரும் 24 ஆம் திகதி குறித்த நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (8-299)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180-200 | 250 | 200 | 200 | 180 |
| உருளைக்கிழங்கு | 225 | 200 | 200 | 240 | -- |
| பச்சைமிளகாய் | 220 | 200 | 200 | 300 | 200 |
| தக்காளி | 160 | 240 | 200 | 240 | 170 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 300 | 150 | 200 |
| கோவா | 140 | 180 | 250 | 200 | 140 |
| கரட் | 170 | 200 | 200 | 250 | 180 |
| பூசணி | 40 | 60 | 50 | 60 | 40 |
| புடோல் | -- | 250 | 200 | 200 | -- |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 150-220 | 200-300 | 300 | 300 | 150-200 |
| பெரிய வெங்காயம் | 165 | 150 | 200 | 200 | 165 |
| பாகற்காய் | 350 | 450 | 500 | 500 | 350 |
| வெண்டக்காய் | 150 | 250 | 150 | 300 | 150 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 250 | 300 | 200 |
| பயற்றங்காய் | 240 | 300 | 200 | 350 | 220 |
| லீக்ஸ் | 160 | 250 | 200 | 250 | 170 |
| பீற்றூட் | 100 | 120 | 150 | 140 | 100 |
| கறிமிளகாய் | 350 | 400 | 400 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 100 | 250 | 200 | 200 | 120 |
| போஞ்சி | 320 | 400 | 450 | 500 | 350 |
| கத்தரிதம்புள்ள | -- | 120 | 200 | 150 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 60-120 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | -- | 1200 | 2000 | 1500 | -- |
| தேங்காய் (ஒன்று) | -- | 200 | 150 | 150-200 | -- |
| இராசவள்ளி | 800 | 1000 | 1000 | 800 | 700 |
| வெங்காயப்பூ | -- | 300 | 500 | 400 | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 200 | 100 |
| பொன்னாங்காணி | -- | 70 | 150 | 60 | -- |
| வல்லாரை | -- | 50 | 100 | 80 | -- |
| ஈரப்பலா | -- | 150 | 150 | -- | -- |

# இராசிபலன்

19.10.2025
ஐப்பசி 02, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி பிற்பகல் 2.59 மணிவரை
உத்தரம் முன்னிரவு 7.32 மணிவரை

சுப நேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32- 6.02 மணிவரை
சுபமுகூர்த்த நாள்

சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்

வளவன்




ஆரோக்கிய நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மற்றவர் களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலை பேசி வழியில் கேட்கும் செய்தி களால் உற்சாகமடைவீர்கள்.




பிள்ளைகளின் தேவை யறிந்து பூர்த்தி செய்வீர் கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்தி கள் வந்து சேரலாம், கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




பொருளாதார நிலை உயர வழிவகை செய் வீர்கள், பயணங்களின் போது பிரபலமானவர்க ளின் சந்திப்பு இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




புதிய நபர்களின் அறி முகம் கிடைக்கும், பொரு ளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், கூட்டு முயற்சிகளில் முன்னேற்ற முண்டு, போசன சுகமுண்டு.




புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேர லாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு , வெளியூர்த் தொடர்பு கள் அனுகூலம் தரும், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள், போசனசுகமுண்டு.




தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், நடப்ப தெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிக ரிக்கும்.




குடும்பத்தில் குதூ கலம் தரும் சம்பவங் கள் இடம்பெறலாம், புதிய பொருட்சேர்க்கை யுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.




குடும்ப ஒற்றுமை கூடும், பொதுநல ஈடு பாடு அதிகரிக்கும், செவிகுளிரும் செய்தி கள் வந்து சேரலாம், உதிரி வரு மானங்கள் வந்து சேரலாம், உற் சாகமான நாள்.




உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக் கும், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும்.




சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், வழிபாடு விருப்பத்தை நிறை வேற்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 90 நாட்கள்...

அவரை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்குப் பொலிஸார் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரியிருந்தனர்.

பொலிஸாரின் இந்தக் கோரிக்கைக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. (ம-7)

## ஐஸ் போதை...

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாண பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## சண்டிலிப்பாயில்...

யப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த திங்கட்கிழமை முகமூடிகள் அணிந்தவாறு நால்வர் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்று நுழைந்து வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டிக்குத் தீ வைத்து விட்டு, வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றிருந்தது.

பின்னர் கொள்ளையடித்துச் சென்ற மோட்டார் சைக்கிளை வீட்டில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மாசியப்பிட்டிச் சந்திக்கு அருகில் நடு வீதியில் வைத்து தீ மூட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரால் மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

அந்நிலையில் நவாலிப் பகுதியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த யட்டியாந்தோட்டையைச் சேர்ந்த இளைஞன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் ஒரு கைக்குண்டு மற்றும் கஜேந்திரா வாள் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸார், வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்ட ஏனைய மூவரையும் அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## தொல்பொருள்...

யாழ்ப்பாணத்தில் உள்ள தொல்பொருள் சின்னங்களை புத்தசாசன, சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி சுனில் செனவி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நேரில் பார்வையிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நல்லூர் மந்திரிமனை, யாழ்ப்பாணம் நூதனசாலை, பருத்தித்துறை தெருமூடி மடம் மற்றும் பருத்தித்துறை வெளிச்சவீடு என்பனவற்றைப் பார்வையிடப்பட்டதோடு அவற்றின் அபிவிருத்திக்குச் சவாலாக உள்ள காணி உரிமம், கட்டுமானம் மற்றும் சட்டம் சார் விடயங்கள் தொடர்பிலும் துறை சார்ந்தவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன் குறித்த சவால்களை தீர்க்க மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கைச் சீரமைப்புத் தொடர்பாகவும் துறை சார்ந்தவர்களுடன் ஆலோசித்தார். (ம-7,33)

## நீதி கோரி...

கையில்,

நீதவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை கண்டனப் பேரணியைத் தடை செய்வதற்கான கட்டளை ஒன்றை தலைப்பில், இவ்வழக்கில் வழக்குத்தொடுநரால் மேற்கொள்ளப்பட்ட சமர்ப்பணத்தினையும் தாக்கல் செய்யப்பட்ட A அறிக்கை மற்றும் இணைக்கப்பட்ட கடிதத்தையும் ஆராய்ந்து பார்க்கின்றபோது, பூநகரி சங்குப்பிட்டிப் பாலத்தின் அருகே சடலமாகக் கரையொதுங்கிய குலதீபா சுரேஸ்குமார் என்பவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பிலும் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு உரிய தண்டனை வழங்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும், இவ்வாறான துன்பகரமான சம்பவங்கள் எமது நாட்டில் இடம்பெறுவதனைக் கண்டித்தும், காரைநகர் பிரதேசசபை முன்பாக அமைதியான வழியில கண்டனப் பேரணி இன்று (19) நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவரின் உடல் கண்டு பிடிக்கப்பட்டு ஒரு சில நாட்களே ஆன நிலையில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு இரண்டு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில கண்டனப்பேரணி ஒன்று இடம் பெறுவது புலன் விசாரணைக்கு பாதகமாக அமையும் என்பதோடு, அப்பிரதேசத்தில் தேவையற்ற அமைதியின்மையையும், இது தொடர்பில் பதற்றத்தையும் தோற்றுவிக்கும் என்பதனை அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது.

எனவே புலன் விசாரணைகள் திருப்திகரமாக நடைபெற்று வரும் நிலையில் இவ்வாறான கண்டனப் பேரணி ஒன்று அவசியமற்ற ஒன்றாகக் கருதி, குறித்த கண்டனப் பேரணியைத் தடை செய்து கட்டளையாக்குகிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,104)

## போதை...

இலங்கை விமானப் படைக்கு ஜனாதிபதி வர்ண விருது வழங்கல் மற்றும் கெடெட் அதிகாரிகளை விமானப்படை அதிகாரிகளாக நியமிக்கும் விழா நேற்று சனிக்கிழமை சீனக்குடா விமானப் படைக் கல்விப் பீடத்தில் இடம்பெற்றது

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த ஜனாதிபதி, கடல்மார்க்கமான போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதில் விமானப்படையின் பங்களிப்பு பாராட்டத்தக்கது.

தற்போது போதைப்பொருள் வர்த்தகம் அரசியல் மற்றும் அரச இயந்திரத்துடன் பின்னிப் பிணைந்துள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எத்தகைய தடைகள் வரினும் நாட்டைப் பாதுகாப்பதற்காக மக்கள் எனக்களித்த மக்களாணையினை நிறைவேற்றுவேன். அதேபோல விமானப்படை அதிகாரிகளாகப் பொறுப்பேற்கும் இளைஞர்கள் நாட்டின் பாதுகாப்பு மற்றும் செழிப்புக்காக குறிப்பாகக் கடல்சார் கண்காணிப்புப் பணிகளைத் திறம்பட செய்ய வேண்டும் என்றார். (ம-7)


මහජන සම්පත
திகதி 2025.10.18
சீட்டிழுப்பு இலக்கம் 5986
N 3 6 7 9 3 0
அத சம்பத
N 7 9 3 0
சீட்டிழுப்பு இலக்கம் 0561
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.10.18
சீட்டிழுப்பு இலக்கம் 102
துலாம் 18 30 33

தன நிதானய
திகதி - 2025.10.18
சீட்டிழுப்பு இலக்கம் - 2016
G 14 37 52 81 G

மெகா பவர்
திகதி 18/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2334
J 21 11 18 28 70

ஜய ஜய JAYA
திகதி 2025.10.18
சீட்டிழுப்பு இலக்கம் 0254
H 4 8 6 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4228
சீட்டிழுப்பு திகதி | 18.10.2025
O 23 29 37 78
O

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.18
சீட்டிழுப்பு இலக்கம் 1295
இடபம் 15 27 34 54 இடபம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.10.2025 வெற்றி வாரம் 0694
ஆங்கில எழுத்து P
5 7 7 5 2 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,687,876.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2960
சீட்டிழுப்பு திகதி 2025.10.18 தினம் சனிக்கிழமை
18 23 27 76 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,260,688.80
DLB

சனிதா
திகதி 18.10.2025 வெற்றி வாரம் 5121
27 36 44 62 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,731,197.60
DLB

சசிரி
வெற்றி வாரம் 0794
சீட்டிழுப்பு திகதி 18.10.2025
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 27 36 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4672
சீட்டிழுப்பு திகதி 18.10.2025 தினம் சனிக்கிழமை
44 52 57 61 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,930,861.20
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 18 26 27 29 68
சீட்டிழுப்பு வாரம் 2136
18.10.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.601,080,670.40
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2786
சீட்டிழுப்பு திகதி : 2025.10.18
13 35 68 71 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,469,338.40
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி...

நடாத்துவதுடன், வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்தும் தாக்குதல்களை மேற்கொள்வதனால், அக்கிராமத்தில் இருந்து 6 குடும்பங்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இச் சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது,

குடத்தனை கிழக்கு, மாளிகைத்திடல் கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் வாளுடன் பொது வெளிகளில் நடமாடி திரிந்து வீதியில் செல்வோரை அச்சுறுத்துவதும் சில வேளைகளில் அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்வதனையும் வழமையாகக் கொண்டுள்ளார்.

அத்துடன் வீடுகளுக்குள் புகுந்து வீட்டில் இருப்போரை அச்சுறுத்தி அவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். இளைஞனின் இத்தகைய செயற்பாடு காரணமாக அக்கிராமத்தில் இருந்து 6 குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

குறித்த இளைஞன் தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸாருக்கு ஊரவர்கள் பல தடவைகள் அறிவித்த போது, பொலிஸார் கிராமத்திற்குள் நுழையும் போதே இளைஞன் கிராமத்தில் இருந்து தப்பியோடி காட்டுப் பகுதிகளுக்குள் தலைமறைவாகி விடுவார்.

இளைஞனின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்த நிலையில், நேற்றைய தினம் சனிக்கிழமை அதிகாலை இராணுவத்தினரின் துணையுடன் அக்கிராமத்தை பொலிஸார் சுற்றிவளைத்து இளைஞனைக் கைது செய்ய விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்த வேளை, இளைஞன் கிராமத்தில் இருந்து தப்பியோடி தலைமறைவானதால் இளைஞனைக் கைது செய்ய முடியவில்லை. அதனால் பொலிஸார் தமது நடவடிக்கையை கைவிட்டுத் திரும்பினர். (ம-7)


**தீபம் உயர் கல்விக் கல்லூரி**
(யாழ்ப்பாணம் – கொக்குவில்)

தரம் 06 முதல் O/L, A/L வரை
தமிழ்மொழி மூலம், English Medium

யாழ் மாவட்டத்தில்... தமிழ் மொழி, ஆங்கில மொழி மூல வகுப்புகளுக்கு தனித்துவ நிறுவனமான **தீபம் உயர் கல்விக் கல்லூரி** 10 வது ஆண்டில் தனது 2 வது கிளையை கொக்குவில் மண்ணில் ஆரம்பிக்கின்றது.
என்பதை அன்பர்கள், நண்பர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
அனுமதிகள் அனைத்தும் November மாதம் முதல் வழங்கப்படும்.
"தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம்"
077 224 7781
(C-4140)

**வாகனங்கள் விற்பனைக்குண்டு**

- Hero Pleasure மோட்டார் சைக்கிள்
- Hero Passion மோட்டார் சைக்கிள்
- Honda Dio மோட்டார் சைக்கிள்

மேற்குறிப்பிட்ட அனைத்து வாகனங்களும் நல்ல நிலையில் உள்ளன.
நேரடியாக வாகனங்களைப் பார்வையிட்டு விலை மதிப்பீட்டைச் செய்து கொள்ளலாம் (Price Quotation)
ஆர்வமுள்ளவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு :
023 225 1858/ 076 699 2366
20/10/2025 – 31/10/2025
கிழமை நாட்கள் காலை 8.30 – மாலை 4.30 பார்வையிடலாம்.
குடும்ப புனர்வாழ்வு நிலையம்,
இல 87, வேளாங்கண்ணி கோவில் வீதி,
சாவற்கட்டு, மன்னார்.
(C-319)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
கொக்குவில் சந்தியில் இருந்து 1Km
யாழ்ப்பாணம் Town இல் இருந்து 4Km
வீடு திருத்து வேலைகள் உள்ளது.
விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்
076 964 9344, 077 821 9205
(5686)

**நாகபூஷணி திருமண சேவை**

அரச, தனியார், உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு. மிகப் பொருத்தமாக, திருமணம் துரிதமாக நிறைவேற்றித் தரப்படும்.
359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணிமண்டபத்திலிருந்து 3 வீடு தள்ளிய லேனில்)
077 138 7596, 071 9999 306
(5684)

**கல்யாணி நகை மாளிகை**

வங்கியில் அடைவு வைத்த தங்க நகைகளை மீட்டு மிகுதிப் பணம் வழங்கப்படும்.
077 784 0379
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C4105)

**உடனடி வேலைவாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் 30,000/- முதல் 50,000/-
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
076 8226236
(C-4139)




**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ள புதிய உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகிறார்கள்.



- Chinese Cooks
- Srilankan Cooks
- Waiters // Waitresses
- Juice, Tea & Coffee Makers
- Cashiers

முன் அனுபவம் அவசியம்
தொடர்பு (தொலைபேசி/ வட்சப்) :
076 629 2830/ 077 370 7786/ 077 704 2918
மின்னஞ்சல் :taprobane.jaffna@gmail.com
சுயவிபரக் கோவைகளை மேலுள்ள தொடர்பு இலக்கங்கள் அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.
(1657)

**Happy Supermarket** - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 200/= | Max 3Kg |
| 1Kg பிறிமா கோதுமை மா | - 160/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 230/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 280/= | |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 209/= | |
| 1Kg தீட்டல்பச்சை | - 240/= | |
| 1Kg சம்பா அரிசி | - 240/= | |
| 10Kg விஜிதா அரிசி | - 2690/= | Max 01 |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 1099/= | |
| 1Kg மல்லி | - 359/= | |
| 1Kg கடலைப்பருப்பு | - 320/= | |
| 1Kg பயறு | - 790/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்.
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30
(1660)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் இல.101, [illegible] வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org